# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 1 (15-06-1998) திங்கட்கிழமை UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:170


## நீர்கொழும்புக் கடலில் மர்மக்கப்பல் சிக்கியது

### பொலீஸார் தொடர்ந்து விசாரணை

கொழும்பு, ஜூன் 15

நீர்கொழும்புக் கடலில் வென்னப்புவ கரைக்கு அப்பால் மர்மக்கப்பல் ஒன்றைப் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

நேற்று முன்தினம் இரவு அக்கப்பல் குறித்து தகவல் கிடைத்ததையடுத்து அக்கப்பலை சோதனையிட்ட பொலீஸார் அக்கப்பலில் இருந்து சில தீந்தை கொள்கலன்களைக் கைப்பற்றினர்.

உயிர் காக்கும் படகு ஒன்றும் அக்கப்பலில் இருந்து மீட்கப்பட்டது.

30 அடி உயரமும், 60 அடி அகலமும் கொண்ட அந்தக் கப்பல் குறித்து பாதுகாப்புத் துறை புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த மாதம் உடப்புக் கடற்பகுதியிலும் இதே போன்று கப்பல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-1-3-21)

### பூந்தோட்டம் பகுதியில்

## உயர்வலு கொண்ட மின்மாற்றி தகர்ப்பு

வவுனியா, ஜூன் 15

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்திருந்த உயர் வலுக்கொண்ட மின்மாற்றி ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை 3-30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் தகர்க்கப்பட்ட இந்த மின்மாற்றியின் பெறுமதி 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

பூந்தோட்டத்தில் அமைந்துள்ள அகதிமுகாமுக்கு மின்சாரம் வழங்கும் மின்மாற்றியே தகர்க்கப்பட்டதாகத் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மாங்குளம் நகர் நோக்கிய நகர்வை படையினர் மீண்டும் ஆரம்பித்தனர்!

## மூன்று இடங்களில் கடும் சண்டை

கொழும்பு, ஜூன் 15

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மாங்குளத்தை அண்டிய தமது நிலைகளில் இருந்து வடக்கு நோக்கிய தமது நகர்வை நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பித்தனர்.

நேற்று மூன்று இடங்களில் விடுதலைப் புலிகள் பதில் தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து அங்கு கடும் சண்டை மூண்டது என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சண்டை நான்கு மணி நேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மாங்குளத்துக்கு சமீபமாக நிலை கொண்டிருந்த தமது முன்னரங்க நிலைகளில் இருந்து வடக்கு நோக்கி நகர ஆரம்பித்தனர்.

படையினருக்கு ஆட்லறி பிரிவும், விமானப் படையும் உதவியாக செயற்பட்டன.

முன்னேறிய படையினர் மீது மூன்று இடங்களில் விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜிக்கள், இயந்திர துப்பாக்கிகள் மற்றும் சிறு ஆயுதங்கள் கொண்டு தாக்குதல்கள் நடத்தினர்.

கடும் சண்டை மூண்ட போதும் படையினர் அந்த தாக்குதலை முறியடித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிஸ்டல் குழு வாழைச்சேனையில் தாக்கு

### கான்ஸ்டபிள் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை நகரில் காவல் கடமையில் இருந்த இரு பொலீஸார் மீது விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவை பகுதியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பொலன்னறுவை மாவட்டத்தில் நாகஸ்தன்ன என்னும் இடத்தில் படையினர் மீது நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என பலாலி இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

இருதரப்புக்கும் இடையில் நடந்த சண்டையைத் தொடர்ந்து படையினர் அப்பகுதியில் மேற்கொண்ட தேடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடையும் படையினர் பற்றிய விவரங்கள்

### ஐ.தே.க. தகவல் பிரிவு தரும்

கொழும்பு, ஜூன் 15

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் காயமடையும் படையினர் தொடர்பான விவரங்களை வழங்கத் தகவல் பிரிவு ஒன்றை ஐ. தே. க. ஆரம்பித்துள்ளது.

24 மணி நேரமும் இயங்கும் இந்தப் பிரிவு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் செயற்படுகிறது.

''இந்த இராணுவ நடவடிக்கையில் அதிகாரிகள் உட்படப் பலர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நலன்கள் அரசியல் பேதமின்றிப் பேணப்பட

(10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து 41 பேர் வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 15

வன்னியில் இருந்து 22 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் குருநகர் இறங்குதுறைக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

உள்ளூராட்சி சபை தேர்தலில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கடந்த 12 ஆம் திகதி தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

பிரதேசசபைத் தலைவராக நடராசா மதனராசா தெரிவுசெய்யப்பட்டார். (இ-9)

### இலங்கையில்

## போரை நிறுத்தக் கோரி டில்லிக்கு சைக்கிள் ஓட்டம்

சென்னை, ஜூன் 15

இலங்கை அரசினால் நடத்தப்பட்டு வரும் யுத்தத்தை இந்தியா தலையிட்டு நிறுத்த வேண்டும் எனக் கோரியும்—

இன அழிப்பில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும்என மத்திய அரசை வற்புறுத்தியும்—

கடந்த இரண்டு மாத காலமாக சைக்கிள் பயணத்தில் ஈடுபட்டுவரும் இரு தமிழ் இளைஞர்கள் கடந்தவெள்ளிக்கிழமை புதுடில்லி போய்ச் சேர்ந்தனர்.

தமிழகம் நெய்வேலியைச் சேர்ந்த பிரணவார்ச்சார்யா, ஜெயக்குமார் ஆகிய இந்த இரு தமிழர்களும் 58 நாள்கள் சைக்கிளில் பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

பெங்களூர், புனே, மும்பாய், அகமதாபாத், ஜெய்ப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று அவர்கள் புதுடில்லி போய்ச் சேர்ந்துள்ளார்கள்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் அவர்கள் வாஜ்பாயைச் சந்தித்து மனு ஒன்றையும் கையளித்தனர். (இ-9)

## லஞ்ச ஊழல் ஆணைக் குழு உறுப்பினர் விலக மறுப்பு

கொழும்பு, ஜூன் 15

லஞ்ச ஊழல் குறித்துவிசாரணை நடத்தி வரும் ஆணைக் குழுவின் பிரதிநிதி இருவரும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யமறுத்து வருவதாக செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட லஞ்ச ஊழல் குழுவில் அங்கம் வகித்த மூன்று உறுப்பினர்களில் ஒருவர் மரணமாகிவிட்டார்.

ஏனையஇருஉறுப்பினர்களுமான உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் விஜயசுந்தர, முன்னாள் பொலீஸ் மா அதிபர் ருத்திரா இராஜசிங்கம் ஆகிய இருவரையும் பதவி விலகுமாறு ஜனாதிபதி

(10ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு காய்ச்சல் பரவும் ஆபத்து

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் தற்பொழுது நிலவிவரும் காலநிலைகாரணமாக டெங்குக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

எனவே டெங்கு காய்ச்சலுக்கான தடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளுமாறும், நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிப்பதில் அதிகம் கவனம் செலுத்துமாறும் சுகாதார அதிகாரிகள்பொது மக்களைக் கேட்டுள்ளனர்.

இம்மாதம் 22 ஆம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்தம்பி துரைராசா

சாவகச்சேரி சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி துரைராசா (முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்) கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் சாவகச்சேரி செல்லத்தம்பி அம்மாக்குட்டி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன், பாலச்சந்திரன், சுமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சரோஜினி, உதயகுமார் (கனடா) ஆகியோரின் மாமனாரும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராசேஸ்வரி, தம்பித்துரை(றாகமம்), ரேவதி (டென்மார்க்), முருகரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், சிவராசா, துரைராசா, மயில்வாகனம், சிறியாவதி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13 - 6 - 98 சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி சிவராசா நாகேஸ்வரி
(நாயன்மார்கட்டு)

(56881)

## திருமதி தங்கமாணிக்கம் பொன்னுத்துரை

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திருமதி தங்கமாணிக்கம் பொன்னுத்துரை 11-06-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வமாணிக்கம் (ஷேக்ஸ்பீரியன்) மாணிக்கம் தம்பதிகளின் அருமை மகளும், சின்னத்தம்பி பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், செல்வமாணிக்கம் முத்துமாணிக்கத்தின் (லண்டன்) அருமைச் சகோதரியும், துரைச்செல்வி (சென்னை), ஐங்கரநேசன் (சென்னை), ஆறுமுகநேசன் (லண்டன்), பத்மினி அனுசூயை (கனடா), ஸ்ரீதத்தாத்திரேயநேசன் (அங்கர் பார்மஸி, கந்தர்மடம்) ரவிச்சந்திரநேசன் (கனடா), திருக்கேதீச்சரநேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாமதி, நந்தா, சிவபாலன், கெங்கா ஆகியோரின் மாமியாரும், அஞ்சலி, பைரவி, துஷ்யந்தி, துவாரகன், நிலானி, வள்ளி, நிதர்ஷன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17-06-1998 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பொன்னுத்துரை
(கணவர்)

பதிவுகாரர் ஒழுங்கை,
தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு

(56878)

## சேனாதிராசா சிதம்பரஉடையார்

பன்னாலையைச் சேர்ந்தவரும் புகையிரத திணைக்கள இளைப்பாறிய பிரதம சிறாப்பருமாகிய சேனாதிராசா சிதம்பர உடையார் அவர்கள் 13 — 06 — 1998 சனிக்கிழமை காலமானார்.

இவர் செல்வ இலட்சுமி அம்மாளின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, இராசரத்தினம், காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும் குமாரசிங்கம், கன - சிங்கம், யோகமலர், இந்திரமலர் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15 — 06 — 1998 திங்கட்கிழமை 35, எட்மன்டன் தெரு, கிருளப்பனை என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

35, எட்மன்டன் றோட்,
கிருளப்பனை, கொழும்பு —06
தொலைபேசி இல. 827487

(56879)

## திருமதி
## லூர்த்தம்மா சவிரிமுத்து

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், இல. 6, குருசோ வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லூர்த்தம்மா சவிரிமுத்து 12-06-98 இல் காலமானார்.

இவர் காலஞ் சென்ற மனுவேற்பிள்ளை சவிரிமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயசீலன், பீற்றர்சிங்கம் (ஆஸ்திரேலியா), இமல்டா (நூலகர், யா. மா. சபை), ஸ்ரெலா (ஆசிரியர், றோ. க. த. வித்தியாலயம், வத்தளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்றோஸ், றூபி (ஆஸ்திரேலியா), கருணாகரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புமாமியும், சுதாகர், தர்ஷன், மீரஜா, லோசி, லக்ஷன், கயானி, சாமிலன், சுகன்யா, கிரான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அல்பிறேட்ம்மா, பொன்றோஸ், புஷ்பம், மக்டலின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (15-06-98) மாலை 4-30 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கருணாகரன்
(மருமகன்)

இல. 6, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

(56883)

## தட்டெழுத்தாளர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணத்தில் இப் பரீட்சை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து இப் பரீட்சைக்குச் சுமார் ஆயிரம் பேர் வரை விண்ணப்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது. (இ-15)


புலமைப் பரிசில்
வினாத்தாள்
பெற்றுக்கொள்ளலாம்.
மாதாந்தப் பரீட்சை
20 - 06 - 98 (சனி)
நடைபெறும்.
BOND
யாழ். நகர்.
(56882)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
பாட்ஷா
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3971)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
எந்த ஒரு தியேட்டரிலும் இவ்வாறான ஒரு சித்திரத்தை எதிர்காலத்தில் கண்டுகளிக்க முடியாது. தவறவிடாதீர்கள் மனதை உருக்கும் இயற்கையான நடிப்பு
(நாளை மட்டும்)
சிவாஜி - சறோஜாதேவி
ஜெமினி நடித்த
பாலும் பழமும்
நேரம்:- 10-00, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56651)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
15 - 06 - 98 திங்கள்
விஜய், கௌசல்யா
மணிவண்ணன், நாசர்
நடித்த
ப்ரியமுடன்
(புதிய வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30
(56880)

யாழ்.
றீகல் வெண் திரையில்
(25 அடி அகலத் திரையில்)
Stereo - Bonex
ஒலியுடன் 10- 30 மணிக்கு
விஜய் - கௌசல்யா
மணிவண்ணன் நடித்த
ப்ரியமுடன்
(புதிய வெளியீடு)
2-30 மணிக்கு
சுப்பர்ஸ்ரார் ரஜனியின்
ராஜாதி ராஜா
( CD வெளியீடு )
[illegible]
[illegible]
சித்திரம் காண்பிக்கப்படும்.
(56886)


உ
ஸ்ரீ முனீஸ்வரன் துணை
யாழ். கோட்டை
## ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான அறிவித்தல்

ஷெ தேவஸ்தான வருடாந்த மணவாளக்கோல அபிஷேக விழா ஜூன் 25 ஆம் திகதி தொடங்க உள்ளது என்பதை உபயகாரர்களுக்கும், அடியார்களுக்கும் அறியத்தருகின்றோம். ரதோற்சவம் ஜூலை 19 ஆம் திகதி நடைபெறும்.

ம. ஞானசேகரம்
பரிபாலகரும், பூசகரும்.

(56884)


டொனால்ட் கணேஷகுமார்
வெற்றிக்கிண்ணம் - 1998
9 ஆவது ஆண்டாக
சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்
நடத்தும்
ஐம்பது (50) ஓவர்களைக் கொண்ட
மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

பங்குபற்ற விரும்பும் சழகங்கள் போட்டிக்குழு செயலாளரிடம் தொடர்பு கொள்ளவும்.
விண்ணப்ப முடிவு திகதி: 21 - 06 - 1998

S, பிறேம்குமார்,
போட்டிக்குழு செயலாளர்,
71/1, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
சென்றலைட்ஸ் வி. க.,
யாழ்ப்பாணம்.

(சி/4022)


# மரண அறிவித்தல்கள்

## முருகேசு அம்பலவாணர்
(சோதி)
(தங்கோடை, காரைநகர்)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், பசறையை வசிப்பிடமாகவும் கொண்ட பசறை 'சிறீ அம்பாள் ஸ்ரோர்ஸ்' உரிமையாளர் முருகேசு அம்பலவாணர் (சோதி) 13-06-1998 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முருகேசு (வர்த்தகர், பசறை) தங்கம்மா தம்பதிகளின் அருமை மகனும், காரைநகர், பலகாட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற கணேசன் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), அன்னமுத்து தம்பதிகளின் அருமை மருமகனும், அருள்குமரன், அருள்செல்வி, ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, சரஸ்வதி, அன்னபூரணம், கோமளவல்லி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசன் (உரிமையாளர், சிறீ கணேசா ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி), சு . சணாமூர்த்தி, காலஞ்சென்ற சண்முகநாதன், V. K. தங்கராஜா (கிளிநொச்சி), கதிரமலைநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-06-1998 இல் பசறையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தங்கராஜா கோமளவல்லி
(சகோதரி - பேபி)

முல்லைப்பிலவு,
காரைநகர்.

(56885)

## மாரிமுத்து சிவசுப்பிரமணியம் (பூலோகம்)
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர், உரும்பராய்)

உரும்பராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிவசுப்பிரமணியம் அவர்கள் 13-06-98இல் அகாலமரணமானார்.

இவர் காலஞ் சென்றவர்களான மாரிமுத்து இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரி, விஜயராசா, காலஞ் சென்றவர்களான தனேஸ்வரன், பத்மநாதன் மற்றும் சற்குணநாதன், மகாதேவன், தனேஸ்வரி, நற்குணநாதன், சத்தியநாதன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்), சந்திரலதா, ஜெயலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகந்தநாயகம், (மக்கள் வங்கி, பல்கலைக்கழக கிளை) கெங்காதரன் (மாவட்ட பதிவகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), கலாவல்லி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், நீரஜா, நிசாகரன், திவானி, சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-06-98 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. இரத்தினேஸ்வரி
(மனைவி)

இந்துக்கல்லூரி வீதி,
உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.

(56877)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபாத் விரைவில் பதவி துறப்பார்?

### எகிப்து பத்திரிகை தகவல்



கெய்ரோ, ஜூன் 15

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யஸீர் அரபாத்தின் உடல் நலம் குறைந்து வருகிறது. எனவே அவர் விரைவில் பதவி விலகுவார்.

எகிப்தில் வெளியாகும் 'அல்–கோமு' என்ற செய்தித்தாள் இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜோர்தான் நதியின் மேற்குக் கரையிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்களை வாபஸ் பெறுவது தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு அரபாத் பதவி விலகுவார் என்று அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. அரபாத்துக்கு இப்போது வயது 68.

பலஸ்தீன சட்டமன்றக் கவுன்சிலின் தலைவர் அகமது குராய், தேசியக் கவுன்சிலின் சபாநாயகர் சலீம் ஜனௌன் ஆகிய இருவரில் ஒருவர் அடுத்து பதவிக்கு வரக்கூடும் என்றும் அப்பத்திரிகை தெரிவிக்கிக்கிறது.

இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நந்தன்யாகு சமரசத்துக்கு முழுமையாக உடன்படமாட்டேன் என்கிறார். அவரை வழிக்குக் கொண்டுவர அமெரிக்காவாலும் முடியவில்லை. ஒஸ்லோவில் ஒப்புக்கொண்டதற்கு மாறாக இஸ்ரேலிய அரசு நடந்து கொள்கிறது. இதனால் பலஸ்தீன மக்களிடையே தீவிரவாத அமைப்பான ஹமாஸுக்கு செல்வாக்கு அதிகரித்து வருகிறது. அரபாத்துக்கு பலஸ்தீனர்கள் மத்தியிலேயே செல்வாக்கு குறைந்து வருகிறது. அவரது பதவிவிலகலுக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கக்கூடும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரீ-10)

# ரஷ்ய விமானம் தாங்கிக் கப்பல் வாங்க இந்தியா முயற்சி!

வாஷிங்டன், ஜூன் 15

ரஷ்யாவிடமிருந்து 'அட்மிரல் கோர்ஷ் கோவ்' என்ற விமானம் தாங்கிக் கப்பலை வாங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது என 'டிபென்ஸ் நியூஸ்' என்ற வாரப் பத்திரிகையை ஆதாரங் காட்டி அமெரிக்க அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1984ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த யுத்தக் கப்பல் 1995ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவின் இராணுவச் சேவையிலிருந்து நீக்கப்பட்டது. இந்தக் கப்பலில் உள்ள ஓடு பாதையில் சிறிது மாற்றம் செய்தால் இறக்கைகள் உடைய விமானங்களும் அதில் இறங்க முடியும்.

'எம். ஐ-17' ரக ஹெலிகளை வாங்கவும் ராஷ்யாவுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தியிருககிறது. 'மிக் 29' ரக போர் விமான மாதிரியில் சற்று மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புடன் கூடிய 'மிக்–29 எஸ். எம், டி.' ரக விமானங்களை வாங்கவும் இந்தியா விரும்புகிறது. இவற்றை விற்றால் ரஷ்யாவுக்கு 4 ஆயிரம் கோடி ரூபா கிடைக்கும்.

ரஷ்யாவின் இராணுவத்தை புனரமைத்ததைத் தொடர்ந்து அறுநூறு போர் விமானங்கள் பயன்படாமல் உள்ளன. அவற்றை விற்று விடவும், வான் எல்லைப் பாதுகாப்புக்காகத் தயாரித்த கண்காணிப்புச் சாதனங்களை விற்று விடவும் ரஷ்ய அரசு முடிவு செய்துள்ளது.

இதே வேளை —

உலக அரங்கில்

ரஷ்யா இந்தியக் கடற்படைக்கு இம் மாதம் மற்றொரு நீர்மூழ்கிக் கப்பலை வழங்க உள்ளது. இந்தியாவுக்கும் – ரஷ்யாவுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த நீர் மூழ்கிக் கப்பல் வழங்கப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்கனவே பல நீர்மூழ்கிகளை ரஷ்யா இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. (ஐ-ரீ-10)

# இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பான தமிழக அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கு வாஜ்பாயிடம் இருந்து சாதகமான பதில்?

### தமிழக வட்டாரங்கள் தகவல்



சென்னை, ஜூன் 15

**இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் இந்திய அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும் என்று கடந்த வாரம் அ. தி. மு. க. தலைமையிலான ஐந்து தமிழகக் கட்சிகள் கூட்டாக விடுத்த கோரிக்கைக்குப் பிரதமர் வாஜ்பாயிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாகத் தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

இது குறித்து பிரதமர் வாஜ்பாய் அடுத்தமாதம் 'சார்க்' மாநாட்டின் போது கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்துவார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா அக்கறை செலுத்த வேண்டும். இலங்கை நிலைவரங்களை நேரில் கண்டறிய தமிழக சட்டமன்றக் குழு ஒன்றை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பவேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை அ.தி.மு.கவின் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா உட்பட அதன் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டு பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் கடந்தவாரம் கையளித்தது தெரிந்ததே.

இதனையடுத்தே இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழகக் கட்சிகளின் கோரிக்கை உரிய முறையில் இலங்கை அரசிடம் எடுத்துக் கூறப்படும் என்ற உறுதிமொழியை பிரதமர் வாஜ்பாய் தெரிவித்திருப்பதாக தமிழக அரசியல் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

#### இலங்கை மௌனம்

இதேவேளை—

அ. தி. மு. க. தலைமையிலான ஐந்து தமிழகக் கட்சிகள் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக எடுத்திருக்கும் தற்போதைய நிலைப்பாடு குறித்து கொழும்பு அரசு இதுவரை கருத்து எதனையும் வெளியிடவில்லை.

இது தொடர்பாக இலங்கை கருத்து எதனையும் வெளியிடுமா என்று வெளி விவகார அமைச்சின் பேச்சாளரிடம் கேட்டபோது அவர் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை— என்று 'இந்து' செய்தி தெரிவித்தது. (ஐ)

# தைவானில் வைரஸ்காய்ச்சல்

## 36 குழந்தைகள் பலி!

தைபேய், ஜூன் 15

தைவானில் குழந்தைகளைத் தாக்கும் கொடிய வைரஸ் காய்ச்சல் பரவியுள்ளது. 36 —க்கும் மேற்பட்ட குழந்தைகளின் உயிர்களைக் காவு கொண்ட இக் காய்ச்சல் வெளிநாடுகளுக்கும் பரவக் கூடும் என்று தைவான் அரசு எச்சரித்திருக்கிறது.

கடைசியாக நேற்று முன்தினமும் 3 குழந்தைகள் இந்த வைரஸ் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தன.

இந்த வைரஸ் வெளிநாடுகளுக்கும் பரவக்கூடும் என்றும் எனவே இந்த வைரஸுக்கான தடுப்பு மருந்தை உடனடியாக உருவாக்குமாறு அரசாங்கத்தை சிறுவர் மருத்துவ நிபுணர் ஒருவர் கேட்டுள்ளார்.

இந்த வைரஸ் பற்றி ஆராய்வதற்காக அமெரிக்க நிபுணர்கள் கடந்த வாரம் தைவானுக்கு விஜயம் செய்தனர்.

காய்ச்சல், சொறி போன்றன இந்த நோய்க்கான அறிகுறிகள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தைவானில் கடந்த வாரம் சுமார் 2 லட்சம் குழந்தைகள் இந்த வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டன. எதிர்வரும் இரு வாரங்களில் இந் நோயால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்தை எட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# பேச்சு நடத்த புதுடில்லி வருமாறு ஜெயலலிதாவுக்கு அத்வானி அழைப்பு

சென்னை, ஜூன் 15

சில முக்கிய விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்த எதிர்வரும் 19 ஆம் திகதி புதுடில்லிக்கு வருமாறு அ.தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகத்தில் தி. மு. க. அரசைக் கலைக்குமாறுகோரி அ.தி.மு.க உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை புறக்கணித்து வரும் வேளையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் தி. மு. க. அரசைக் கலைப்பது தொடர்பான அ. தி. மு. கவின் கோரிக்கை இச்சந்திப்பின் போது ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்று அ.தி.மு.க உட்பட ஐந்து தமிழகக் கட்சிகள் கூட்டாக விடுத்துள்ள கோரிக்கையை அடுத்து எழுந்துள்ள நிலைமை குறித்தும் இச் சந்திப்பின் போது உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி ஜெயலலிதாவுடம் பேசுவார் என அவதானிகள் எதிர்பார்த்துள்ளனர்.

### ஆப்கன் பூகம்பப் பகுதியில்

# ஹெலிகளுக்குப் பதிலாக கழுதைகள் பணியில்!

காபூல், ஜூன் 15

வடக்கு ஆப்கானிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட பூகம்ப அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல ஹெலிக்கொப்ரர்கள் கிடைக்காததால் அப்பணியில் கழுதைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதனால் உணவு மற்றும் பொருள்கள் மக்களைச் சென்றடைவது தாமதமாகியுள்ளது.

அவசர பணியில் ஈடுபட 10 ஹெலிகளை வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட மத்திய ஆசிய நிறுவனம் ஒன்று உரிய நேரத்தில் அவற்றை வழங்கத் தவறியதால் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது இழிவானது என்று ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

### இந்தியா, பாகிஸ்தானுக்கு

# கடன்களை இடை நிறுத்த 'ஜீ-8' கூட்டமைப்பு முடிவு

லண்டன், ஜூன் 15

இந்தியாவும், பாகிஸ்தானும் நடத்திய அணு சோதனைகளை அடுத்து இவ்விரு நாடுகளுக்கும் வழங்கும் கடன்களை இடை நிறுத்தி வைக்க 'ஜீ-8' நாடுகளின் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

லண்டனில் நேற்று முன்தினம் கூடிய 'ஜீ–8' கைத்தொழில் நாடுகளின் கூட்டமைப்பின் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆயினும் மனிதாபிமான அடிப்படையிலான கடன்களைத் தொடர்ந்து வழங்குவதெனவும் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

'ஜீ-8' நாடுகள் எடுத்த முடிவு 'துரதிர்ஷ்டவசமானது' என்று இந்தியா கூறியுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் இது உடனடியான பாதிப்புகளை ஏற்படுத்தாது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'ஜீ–8' கூட்டமைப்பின் முடிவு எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும் என்று பாகிஸ்தான் தெரிவித்தது. பாகிஸ்தான் புதிய இடங்களில் இருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் என்று பாகிஸ்தான் நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

## விமானம் தரையிறங்கியது

ஐ. நா. நிவாரண உதவிப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நேட்டோ இராணுவ விமானம் ஒன்று அல்பேனியத் தலைநகர் ரிரானா சென்று இறங்கியுள்ளது.

கோசோவோவில் இருந்து உயிர்தப்பி அகதிகளாகவெளியேறிவரும் அல்பேனிய மக்களுக்கு இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பிறவுண் கலர் டோமன் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. ஐயாத்துரை, M. S. லேன், கோண்டாவில் கிழக்கு. [56857]

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் சிவகுமார் ஆகிய எனது மோட்டார் சைக்கிள், காப்புறுதிச்சான்றிதழ் இணுவிலுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். விக்னேஸ்வரா ஜுவல்லர்ஸ், கே. கே. எஸ். வீதி, இணுவில். [56860]

ஜெயபானு ஜெயபாலன் என்பவருடைய தேசிய (788073178V), விசேட (0906001801) அடையாள அட்டைகள் 13-06-98 அன்று வின்சர் தியேட்டருக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஒப்படைக்கவும் [56872]

## அறை வாடகைக்கு

பல்கலைக்கழக பெண் பிள்ளைகளுக்கு மட்டும் உரிய தான, அறை வாடகைக்கு உண்டு. மின்சாரம், நீர் வசதி மற்றும் தளபாட வசதிகளும் உண்டு. (ஐந்துபேர் தங்கக் கூடியவை, அனெக்ஸ்) தொடர்பு: திருமதி பிலோமினா நீக்கிலாப்பிள்ளை, இல.22, ஓடலேன், வண்ணார் பண்ணை. [56856]

## வீடு விற்பனைக்கு

மட்டுவில் கிழக்கு, புத்தூர் வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடும், அருகிலுள்ள வளவும், வயற்காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; திருமதி சி. வேல்நாயகம், மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி. [56862]

## காணி விற்பனைக்கு

ஆனைக் கோட்டை பழைய பொலிஸ்ரேசன் பின் வீதியில் உள்ள 6 பரப்பு 3/4 குளி காணி மூன்று பக்கப் பாதையுள்ள சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பி. தருமநாயகம், 43/11, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். [56870]

## மணமகன் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுடைய டாக்டர் மணமகளுக்கு டாக்டர், பொறியியலாளர் அல்லது கணக்காளர் மணமகன் விரும்பத்தக்கது. தொடர்பு: செ. விஜயரத்தினம், முருகன் திருமணசேவை நவாலி கிழக்கு, மானிப்பாய். [56873]

## வீடு வளவு விற்பனை

கிராம்புவில, சாவகச்சேரி வடக்கு 1 ஆம் கட்டை வீதியில் 5½ பரப்புக் காணிக்குள் அத்தியாவசிய வசதிகள் அமைந்த 5 அறைகளுடன் கூடிய தரமான நிலையிலுள்ள பழைய கல் வீடு விற்பனைக்குஉண்டு. தரகர்வேண்டாம், (16-06-98 இலிருந்து 25-06-98 -க்குள் மட்டுமே தொடர்பு) தொடர்பு: பொ. அருந்தவமலர், கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. [56794]

## யாழ்ப்பாணம

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் உங்களது வரலாறு, வரலாற்றை மறக்கலாமா? 300 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை வீரகேசரியில் எழுதிய கட்டுரைகள் ரூபா 50. [56247]


**CHUNDIKULI GIRLS' COLLEGE**
OLD GIRLS' ASSOCIATION, JAFFNA.
ANNUAL GENERAL MEETING
AND
FELLOWSHIP LUNCH
Will be held on 20 – 06 – 98
at the College Premises

PROGRAMME — 9. 00 A. M. Thank's giving Service at St. John the Baptist Church. Chundikuli.
10. 15 A. M. Principal's tea.
10. 30 A. M. A. G. M.
11. 30 A. M. Flower and Bombay Sweet. Making Demonstrations.
12. Noon Fellow ship Lunch.

Tickets for Lunch Rs. 100 per Person.
(56875) - Secretary.



**சுஜாத்தா நகை அகம்**
அச்சுவேலி
★ நம்பிக்கை ★ 22 கரட்
★ நாணயம் ★ குறித்த தவணை
நவீன இயந்திர சாதனங்களின் உதவியுடன் புதிய டிசைன்களில் தரமான தங்க, வைர நகைகளுக்கு நாடவேண்டிய இடம்:
**சுஜாத்தா நகை அகம்**
பிரதான வீதி, அச்சுவேலி.
(மகாவித்தியாலயத்திற்கு அருகில்)
(56871)



**கண்ணீர் அஞ்சலி**
யா/ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை
எமது சிரேஷ்ட ஆசிரியர்
திரு. சி. பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்புப் பாரியார்
**திருமதி ராதாராணி பாலசுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/மத்திய கல்லூரி)
அவர்களின் மறைவையிட்டு நாம் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுறோம்.
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(யா/ஆனைக்கோட்டை
றோ. க. த. க. பாடசாலை)
(56842)


# பற்சிகிச்சை நிலையம்

தென்மராட்சி, ஜூன் 15

பளை ஆஸ்பத்திரியில் நவீன வசதிகள் கொண்ட பற்சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஆஸ்பத்திரி அறையொன்றிலேயே தற்போது பற்சிகிச்சை நிலையம் வாரத்தில் பிரதி செவ்வாய்க்கிழமைதோறும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

# தேங்காய் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 15

குடா நாட்டில் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. முன்னர் 15 முதல் 20 ரூபாவரை விற்கப்பட்ட தேங்காய்கள் தற்போது பத்து முதல் பதினைந்து ரூபாவுக்குள் விற்பனையாகின்றன.

மிருசுவில் பாதுகாப்பு முன் அரண் பகுதியூடாகத் தேங்காய்களை எடுத்து வருவதற்கான தடைகள் தளர்த்தப்பட்டமையினால் பளை, மற்றும் பகுதிகளில் இருந்து தேங்காய்கள் அதிகளவில் சந்தைக்கு வருகின்றன. இதுவே விலை குறைவுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரீ)

# மதுபான, சிகரெட் விளம்பரங்கள் ஜனவரி முதல் தடைசெய்யப்படும்!

கொழும்பு ஜூன் 15

சிகரெட் முதலான புகைப் பொருள்களினதும் மது பானங்களினதும் விளம்பரங்களை செய்தித் தகவல் ஊடகங்களில் வெளியிடுவதை தடைசெய்வது என அரசு தீர்மானித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இந்தத் தடை உத்தரவு நடைமுறைக்கு வரும். இதனைத் தொடர்ந்து மதுபானம் புகைத்தற் பொருள்கள் ஆகியவற்றுக்கான விளம்பரங்கள் எதனையும் ஏற்கக் கூடாது என்று செய்தித் தகவல் ஊடகங்களுக்கு உத்தரவிடப்படும்.

தனியார் தகவல் தொடர்புத்துறையினரும் இந்த விளம்பரங்களைத் தடை செய்யும் அரசின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு நடக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவர்.

மதுபானம் சிகரெட் போன்ற புகைப் பொருள்களினால் ஏற்படும் பாதிப்புக் குறித்து ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கமையவே இந்தத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மதுபானம், புகைத்தற் பொருள்கள் ஆகியவற்றினைப் பற்றி விளம்பரப்படுத்தப்படும் காட்சிகளைத் தவிர்க்கவேண்டியதன் அவசியம் பற்றியும் அந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையில் தற்போது மதுபானமும் புகைத்தற் பொருள்களுமே நாட்டில் பெரிய ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்பட பிரதான காரணமாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவு விளம்பரப் பலகையில் ஒட்டப்படும் விளம்பரங்களுக்கும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் விளம்பரப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கும் பொருந்துமா என்பது பற்றித் தெளிவாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ஐ-6)

# நாவற்குழி - மறவன்புலோ வீதி மோசமான நிலையில்

சாவகச்சேரி, ஜூன் 15

நாவற்குழியிலிருந்து மறவன்புலோ — தனங்களப்பு ஊடாக சாவகச்சேரி செல்லும் ஏழு மைல் நீளமான வீதி கடும் சேதமுற்று கடந்த 12 வருடங்களாக திருத்தப்படாமல் காணப்படுகிறது.

இந்த வீதியால் போக்குவரத்துச்செய்யும் பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாக மறவன்புலோ விவசாயிகள் சம்மேளனம் கடந்த நவம்பர் மாதம் வீதி அபிவிருத்தி அதிகார சபை வட பகுதி தலைவர், பொறியியலாளர் ஆகியோரைச் சந்தித்து, தெரிவித்த போது இந்த ஆண்டின் முற்பகுதியில் இந்தவீதி திருத்தப்படுமென உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை இந்த வீதி திருத்தப்படாமையால் ஏமாற்றமடைந்த பொது மக்கள் மேற்கொண்டு கொழும்பிலுள்ள அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னர் இந்த வீதி திருத்தப்படாவிட்டால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டி வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-31)

# ஜீ. எஸ். ரி. வரி பற்றி மக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 15

பொருள்கள் மற்றும் சேவைகள் வரி (ஜீ. எஸ்,ரி.) அறவிடப்பட்டபின் அதற்காக வழங்கப்படும் சிட்டைகளில் ஜீ. எஸ். ரி; இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதை பொதுமக்கள் அவதானிக்க வேண்டும் என உள்ளூர் வர்த்தக ஆணையாளர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

ஜீ. எஸ். ரி. இலக்கத்தின் இறுதியில் 5000 என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த இலக்கங்களுக்கு முன்பாக ஒன்பது இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பதை பொதுமக்கள் கவனிக்க வேண்டும்.

உதாரணமாக 11 407 59 02 5000 என இலக்கங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும். இவ்வாறு ஜீ. எஸ். ரி. இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையானால் அது தொடர்பாக வர்த்தகரிடம் கேட்பதற்கு சகல உரிமைகளும் பொதுமக்களுக்கு உண்டு. இது தொடர்பாக முறைப்பாடுகள் தெரிவிக்கவேண்டுமாயின் பொதுமக்கள் 422151 அல்லது 43939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-ரீ)

# ஆத்மீக செயற்பாடுகளே ஆத்ம பலத்தைத்தரும்

## இசை விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 15

மனிதன் சுயகட்டுப்பாட்டுடன் ஆத்மீக செயற்பாடுகளில் ஈடுபடும்போது ஆத்ம பலத்தைப் பெறுகின்றான். இதற்கு இசை பெருந்துணை புரிகின்றது.

அண்மையில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற மாதாந்த இசை நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:

உலக மக்கள் ஒழுக்கத்துடனும், நற்பண்புகளுடனும் வாழ்வதற்கு சமயக் கோட்பாடுகள் வழிகாட்டுகின்றன. மனித மனத்தின் விலங்கியல்பினை ஒழித்து மனச் செம்மையுடையவனாக்கி வாழ வழிவகுத்தது இந்து சமயம்.

உலகியல் தேவைகளுடன் ஆத்மீகத் தேவைகளும் நிறைவு செய்யப்படும் பட்சத்திலேயே மனிதன் நிறைவான வாழ்க்கையைப் பெற முடியும்— என்றார்.

இசை நிகழ்வை யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் செல்வி தங்கத்துரை தங்கலட்சுமி மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

விழாவின்சிறப்பு நிகழ்வாக செல்வி சிவப்பிரியா வைரமுத்துவின் இசைக்கச்சேரி இடம்பெற்றது. (ஐ-8)

# நாவாந்துறை மீனவருக்கு மீன்பிடி உபகரணம்

## சுழற்சி முறையில் வழங்கல்

குருநகர், ஜூன் 15

நாவாந்துறையில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுள்ள மீனவர்கள் 50 பேருக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் சுழற்சி முறையில் ரூபா ஐந்து லட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை வழங்க உள்ளது.

இந்த மீன்பிடி உபகரணங்கள் நாவாந்துறை மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கம் மூலம் வழங்கப்பட உள்ளதாகவும் —

இவைகளை வழங்குவதற்கான பதிவுவேலைகள் நடைபெற்று வருவதாகவும் —

நாவாந்துறை சென் நீக்கலஸ் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எவ். ஜேக்கப் தெரிவித்தார். (இ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுமாரனின் சிலை புனரமைப்பை இடைநிறுத்த பிரதேசசபை உத்தரவு!

## கண்டித்து புளொட் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 15

உரும்பிராயில் உள்ள தியாகி சிவகுமாரனின் சிலையைப் புனரமைக்கும் வேலையை இடை நிறுத்துமாறு வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜாவிடம் கடிதம் மூலம் கேட்டிருக்கிறார்.

வலி. கிழக்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளை வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்கும் வரை இடைநிறுத்தி வைக்குமாறு ஈ. பி. டி. பி. அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளருக்கு அறிவித்ததை அடுத்தே —

வலி. கிழக்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள தியாகி சிவகுமாரனின் சிலை புனரமைப்பு வேலையை இடைநிறுத்துமாறு 'புளொட்' அமைப்புக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தியாகி சிவகுமாரனின் சிலையைப் புனரமைப்பதற்காக புளொட் அமைப்பினர் ஏற்கனவே சிலைக்கான அடிக்கல்லை நட்டு புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

சிலை புனரமைப்பை இடைநிறுத்துமாறு விடுக்கப்பட்ட திடீர் உத்தரவைக் கண்டித்து புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆயுதம் ஏந்திய போராட்டமாக முன்னெடுத்து தமிழின விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்து பல தியாகிகள் உருவாகுவதற்கு வித்திட்ட தியாகி சிவகுமாரனின் தியாகத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தும் செயலுக்கு எமது அமைப்பு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தியாகி சிவகுமாரனுக்கு சிலை ஏன் நிறுவப்பட்டது? எப்போது நிறுவப்பட்டது? இச்சிலை புனரமைக்கப்படும் நோக்கம் என்ன? என்பவற்றைத் தெரிந்து கொள்ளாமல் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தையும், தியாகி சிவகுமாரன் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்துவதாகவே இது அமைகின்றது.

வலி. கிழக்குப் பிரதேசம் குறிப்பாக கோப்பாய்த் தொகுதி விடுதலைப் போருக்கு பல தலைவர்களைக் கொடுத்துள்ளது. கோப்பாய் கோமான் அமரர் கு. வன்னியசிங்கம், சிந்தனைச் சிற்பி அமரர் சி. கதிரவேற்பிள்ளை போன்ற தலைவர்கள் தந்தை செல்வா வழியில் முன்னின்று போராடினார்கள்.

தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தை உரும்பிராய் தந்த வீரமறவன் தியாகி சிவகுமாரன் முன்னெடுத்தார். இவர்களின் தியாகங்களை எதிர்கால சந்ததியினருக்குத் தெரியப்படுத்தவே சிலைகள் அமைக்கவும் புனரமைக்கவும் முயற்சி எடுத்து வருகின்றோம்.

தியாகி சிவகுமாரனின் சிலை 1975 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது எனினும் பின்னர் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் அது உடைக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு அது மீண்டும் அமைக்கப்பட்டு மீண்டும் அது உடைக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் தெரிந்திருந்தும், தெரியாதவர்கள் போல சிலை புனரமைக்கப்படக் கூடாது என தன்மானமுள்ள எந்தத் தமிழ்க் குடிமகனும் தடுக்கமாட்டான். இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமது வங்குரோத்து அரசியலையும், அரசியல் விபசாரத்தையும் விடுத்து யுத்த அழிவுகளால் புண்பட்டுள்ள எமது மக்களின் வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சாமல், மக்களின் மறுவாழ்வுக்காகச் செயற்படுவதே சிறந்ததாகும்.


இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-ஐ-8)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27 — 03 — 1945



மறைவு
07 — 06 — 1996

அமரர்
**சோமசுந்தரம் சண்முகநாதன்**
(இந்திரன்)

திதி: 15 — 06 — 1998

அன்பின் திருவுருவே, இல்லத்தின் குலவிளக்கே, பாசத்தின் சிகரமே, பண்பின் உறைவிடமே, ஈராண்டு ஓடிக்கழிந்ததுவே அப்பா! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டீரோ?
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.


பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

''வசந்தம்''
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(56851)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**தங்கையா நடேசபிள்ளை**
(முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

தோற்றம்
1935 - 10 - 17

மறைவு
1998 - 05 - 16

பாசத்தின் உறைவிடமாய்,
பண்பின் ஒளி விளக்காய் - இருந்து
அன்பினால் எம்மை வழிநடத்தி,
கண்ணீரில் கரைந்தீர்கள்!

இவரின் மரணச்செய்தி கேட்டு உடன்வந்து உதவியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

'லக்சுமி வாசா'
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

(56868)

---

# செய்திக் கொத்து

### உடற்கல்வி கற்கைநெறி விண்ணப்பம்

வலி. தென்மேற்கு, ஜூன் 15

யாழ். பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு 200-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான எழுத்து மூலப் பரீட்சை விரைவில் நடத்தப்பட்டு நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இரண்டு வருட கற்கை நெறியைக் கொண்ட உடற்கல்வி டிப்ளோமா முழுநேரக் கற்கை நெறியாக வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-185)

### கிணற்றில் வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கிணற்றினுள் தவறி விழுந்த 5 வயது மகனைக் காப்பாற்ற அக்கிணற்றினுள் பாய்ந்த தந்தை கால் முறிந்து படுகாயமடைந்தார். மகன் காயம் எதுவுமின்றித் தப்பியுள்ளார்.

மாதகலில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சூசைப்பிள்ளை அகஸ்ரின் (வயது51) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஐ-15)

### ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

சண்டிலிப்பாய், ஜூன் 15

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேலும் 300 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக்கான ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது. அண்மையில் 120 குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-185)

### மரக்கறி விலை உயர்வு

திருநெல்வேலி, ஜூன் 15

திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன. முருங்கைக்காய் ஒரு கிலோ 125 ரூபாவாகவும், பயிற்றங்காய் ஒரு கிலோ 60 ரூபாவாகவும். கத்தரிக்காய் ஒரு கிலோ 40 ரூபாவாகவும் நேற்று விற்கப்பட்டன.

இதேவேளை தேசிக்காயின் விலையும் அதிகரித்துள்ளது. (ஐ-135)

### விளையாட்டு விழா

சண்டிலிப்பாய், ஜூன் 15

கட்டுடை விநாயகர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கட்டுடை சமூக அபிவிருத்தி மன்ற உப தலைவரும், கட்டுடை சேமிப்புக் கழகத் தலைவருமான மா. க. முதலியார் தலைமையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

யாழ் மாவட்ட சமூக சேவை அதிகாரி ரி. சிவநேசன் இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (ஐ-135)

### தமிழ்த்துறை ஆய்வுரை

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறையினரால் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பேராசிரியர் தா. சுப்பிரமணியம் தலைமையில் ஆய்வரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

''ஈழத்து புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்'' என்ற தலைப்பில் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் ம. இரகுநாதன் ஆய்வுரையை வழங்குவார். (ஐ-8)

### பட்டச் சான்றிதழ்

வலி. தென்மேற்கு, ஜூன் 15

அமெரிக்காவிலுள்ள பிறின்ஸ்ரைன் இறையியல் பல்கலைகழகத்தில் ஒரு வருட முது இறையியல் மாணிப்பட்ட கற்கைநெறியை முடித்த யாழ்ப்பாணக் கல்லூரி பிரதி அதிபர் வண. பிதா அந்தோனி அரியரட்ணம் போலுக்கு பிறின்ஸ்ரைன் பல்கலைக்கழகத்தால் பட்டச் சான்றிதழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-8, 185)

### புலமைப் பரிசில்

வலிகாமம்தெற்கு, ஜூன் 15

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 28 மாணவர்களுக்கு சரவணமுத்து புலமைப் பரிசில் நிதியத்திலிருந்து தலா 5 ஆயிரம் ரூபா வீதம் கல்லூரி அதிபர் சி. மகேந்திரராசாவினால் வழங்கப்பட்டுள்ளது. (8, 152)

### பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், ஜூன் 15

நாவற்குழி பகுதியில் வீட்டின் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை பாம்பு தீண்டிய சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

சந்திரன் சிந்துஜா (வயது 4) என்ற சிறுமியே பாம்பினால் கடியுண்டவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-139)

### பழங்கள் திருட்டு

வலி. வடக்கு, ஜூன் 15

வலி. வடக்குப் பகுதியிலுள்ள மீளக்குடியேற அனுமதிக்கப்படாத இடங்களிலுள்ள ஆள்கள் இல்லாத வீடுகளில் மாம்பழம், பலாப்பழம் போன்றவை திருடப்பட்டு வருகின்றன. (8-86)

### வீதி திருத்தம்

சுன்னாகம், ஜூன் 15

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவிலிலிருந்து சுன்னாகம் நோக்கி வரும் வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வீதி கடுமையாகச் சேதமுற்று, மக்கள் போக்குவரத்துக்குச் சிரமமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (8, 27)

### விண்ணப்பப் படிவங்கள்

வலி. தென்மேற்கு, ஜூன் 15

முதுகல்வி மாணிக்கான விண்ணப்பப்படிவங்கள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதாக யாழ். திறந்த பல்கலைக்கழக இணைப்பாளர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-8-185ரீ)

### சற்சங்கம்

கொழும்புத்துறை, ஜூன் 15

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள சாயி குரு ஷேத்திரத்தில் பிரதி ஞாயிறு தோறும் மாலை 3-00 மணி முதல் 4-30 மணி வரை சற்சங்கம் நடைபெறுகிறது. ஆத்மிக ஆர்வமுள்ளவர்கள் இதிற் கலந்து கொண்டு வருகின்றனர். (ஐ-30)

### இளைஞர் மரணம்

சாவகச்சேரி, ஜூன் 15

சாவகச்சேரி கெருடாவில் பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவர் கிருமிநாசனி அருந்திய நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

துரைசிங்கம் தினேஸ் (வயது 19) என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

**கணக்காய்வுக் காலம் 1994 ஆம், 1995 ஆம் ஆண்டுகளுக்கான**

**கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்**

மேற்படி காலங்களுக்கான கணக்காய்வு நடைபெறுவதனால் 30 - 06 - 98 ஆம் திகதிக்கு முன்பு கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் தங்களது மீதிகளை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**— கணக்காய்வாளர்கள்**

12-06-1998 (சி/4018)

# கரம் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவை கரம் சுற்றுப் போட்டியை ஆண், பெண் இரு பாலாருக்கும் நடத்த உள்ளது. இப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழக உடற் கல்வித்துறை (மருத்துவபீட மைதானம் அருகில்) அலுவலகத்தில் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப் பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**போட்டி பற்றிய விவரம்**

இடம்:- யாழ். பல்கலைக்கழக மாணவர் பொது அறை

நாள்:- 4, 5, 7, 9, 11, 12 ஜூலை 1998

நேரம்:- 8. 30 காலை முதல் 5.30 மாலைவரை

அனுமதிக்கட்டணம்:- ஒற்றையர் ஆட்டம் 40/- இரட்டையர் ஆட்டம் 60/-

விண்ணப்ப முடிவு திகதி:- 25 — 06 — 1998

பணிப்பாளர்,

**விளையாட்டு அவை,**

**யாழ். பல்கலைக்கழகம்.**

(56863)

# தெளிவாக ரி.வி. பார்க்க

இலங்கை இந்திய ரி. வி. நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்க்க அன்ரனா பொருத்தவும், பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்தவும், ரி. வி. டெக், ரேடியோ, மணிக்கூடுகளைப் பழுதுபார்க்கவும், கொம்பியூட்டர் மூலம் ஒளிருநாடாக்களில் கலர்ப் படங்களை கழுவிப்பெற்றிடவும் உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்புகளுக்கும்:

(உதிரிப்பாகங்களுக்காக பழுதடைந்த, நல்ல நிலையில் உள்ள ரி. வி., டெக், கசற்றேடியோ, மணிக்கூடு என்பன வாங்கப்படும்)

## வீனஸ் டெல்கா


284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரைமுன்பாக) யாழ்ப்பாணம்.

கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.

[மீன் சந்தைஅருகில்]

(சி3995)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 16 |
| 06 | 05 |
| 1936 | 1998 |

15 - 06 - 98

## அமரர் முதலி இராமன்

அன்பின் திருவுருவமே
அமைதியின் உறைவிடமே
குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஈந்துவக்கும் இன்பமதை
இயல்பாகக் கொண்ட எம்
தந்தையே! இனி
எப்போ உமைக் காண்போம்?

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

கைதடி மத்தி.

[56826]

# ஆஸ்பத்திரி ஊழியர் சீருடை

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமை புரியும் சிற்றூழியர்களுக்கு 1998 ஆம் ஆண்டுக்கான சீருடைத்துணி வழங்கப்பட்டுள்ளது.

தையல் கூலியை வழங்குவதற்கான நடவடிக்கை ஆஸ்பத்திரி நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

தென்மராட்சி, ஜூன் 15

மூன்று நாள்களுக்கு முன்னர் காணாமற் போன குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பளை அரசர் கேணியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை துரை (வயது 52) என்பவரே மரணமானவராவார்.

இவரின் குடும்பத்தினர் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று இன்னமும் திரும்பாததால் இவர் தனியாகவே வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ—117)

# வாளிகள் வழங்க நடவடிக்கை

குருநகர், ஜூன் 15

இடம்பெயர்ந்து மீளவும் குடியேறியுள்ள மக்களுக்கு வழங்குவதற்காக கொழும்பிலிருந்து கப்பல் மூலம் 2ஆயிரத்து500 வாளிகள் அரசசார்பற்ற நிறுவனங்களினால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

அறவழிப் போராட்டக் குழு, வை.எம்.சி.ஏ., அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83 ஆகியவை மூலம் இவை மக்களுக்கு விநியோகிக்கப்படும். (இ—51)

# விண்ணப்பப் படிவங்கள் விநியோகம்

அச்சுவேலி, ஜூன் 15

ஆசிரியர் தொடர்கல்விப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ், இந்துக் கல்லூரி தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் விநியோகிக்கப்படுகின்றன.

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை விண்ணப்பப் படிவங்களைப்பெற்றுக்கொள்ளலாம் என சிரேஷ்ட போதனாசிரியர் எஸ். சரவணமுத்து தெரிவித்தார். (ஐ—11)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், விரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.


வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

(56344)

வெற்றிப்படைப்பு! வெற்றிப்படைப்பு!!

பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேடையேறுகிறது

# செல்லையா மெற்றாஸ் மயிலின் நெறியாள்கையில் தயாரித்த



# வேழம்படுத்த வீராங்கனை

[ஆட்ட நாட்டுக் கூத்து]

பின்வரும் இடங்களில் விரைவில் எதிர்பாருங்கள்!

| | |
|---|---|
| ★ சாவகச்சேரி | ★ மருதனார்மடம் |
| ★ வடமராட்சி | ★ மானிப்பாய் |
| ★ கோப்பாய் | ★ சுழிபுரம் |

திகதி, இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

செ. மெற்றாஸ் மயில்
செயலாளர்

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்**

விளம்பர அன்பளிப்பு:-

## நிர்மலன் நகைமாளிகை

190, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:- புவனேந்திரம் நகைத் தொழிலகம்

58, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(56840)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
27 — 12 — 1939

மறைவு
24 — 06 — 1997

**அமரர் சுப்பிரமணியம் விநாயகரெட்னம்**

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
எம்மையெல்லாம் வழி நடத்திய எங்கள்
அன்புத் தெய்வம் அப்பாவே!
ஆண்டுகள் பல சென்றாலும்
உங்களின் நினைவில் வாழ்ந்து கொண்டிருப்போம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!

அன்பு மனைவி, பிள்ளைகள்.

65, அரசடி றோட்,
யாழ்ப்பாணம்

(56869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தலைக்கு மேல் வெள்ளம்

அடக்கு முறைகளில் இருந்து ஈழத்தமிழர்களை விடுவித்து அவர்களின் அரசியல் எதிர் காலத்தைத் தீர்மானிப்பதற்கான போராட்டம் பல்வேறு முனைகளிலும், பல்வேறு வடிவங்களிலும் மேற்கொள்ளப்படும் இந்தக் கால கட்டத்தில்—

சமூகச் சீரழிவுக்குக் காரணமாக கொடுங்கோலர்களின் பிடியில் இருந்து குடாநாட்டுத் தமிழர்களின் சமூக மற்றும் வாழ்வியல் தனித்துவத்தை காப்பாற்றி— அவர்களின் கலாசார, பண்பாட்டு விழுமியங்களைத் தக்க வைத்து— சமுதாய ஒழுக்கத்தைப் பேண— மற்றொருவிடுதலைப் போராட்டம் ஒன்றை அவசரமாக முன்னெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

என்றுமில்லாதவாறு கலாசார சீரழிவுகளும் பண்பாட்டு இழிசெயல்களும் குடாநாட்டில் மலிந்து பல்கிப் பெருகிவருவது பேரச்சத்தைத் தருவதாக உள்ளது.

சரியான வேலிகளும், காவலர்களும் இல்லாமல் போனதுதான் இந்தக் கடை நிலைக்குக் காரணம் என்பது தெளிவு.

திருட்டு, கொள்ளை, அபகரிப்பு, பலவந்தமாக அசையும், அசையாச் சொத்துக்களை கைப்பற்றுதல் என்று மாற்றான் பொருள்களில் கண் வைக்கும் செயல்கள் ஒருபுறம்; மது, மாது போதைவஸ்து, நீலப்படம், கசிப்பு என்று தன்னைத்தானேயும் அதன் மூலம் சமூகத்தையும் சீரழிக்கும் கேடுகெட்ட பழக்கவழக்கங்கள், செயல்கள் மறுபுறம். இவற்றுக்கு மத்தியில் சமூகச் சீரழிவைத் தடுத்து நிறுத்தி, சமூகத்தைக் காப்பாற்றுவது யார் என்ற கேள்வி எழுந்திருக்கின்றது.

வரைமுறையான கட்டுப்பாடுகள் இல்லாததால் இளைஞர்கள் — கூட்டம், கும்பலாகச் சேர்ந்து — அடாவடித்தனங்களிலும் அத்துமீறல்களிலும் ஈடுபடுவது சகஜமாகிவிட்டது.

மதுபோதையில் சென்ற இளைஞர் கூட்டம் ஒன்று மினிபஸ்ஸில் புரிந்த கலாட்டா பற்றி நேற்றைய பத்திரிகையில் தகவல் வெளியாகியிருந்தது.

ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வாரு வேளையிலும் இத்தகைய சம்பவங்கள் சகஜமாகிவிட்டன.

சாதாரண சட்டங்கள் இத்தகைய சீர்கேடுகளைத் தடுத்து நிறுத்தப் போதுமானவையல்ல என்பதே பொதுவான கருத்து. சட்டத்தின் வேலிகளே பயிரை மேயும் நிலைமை வேறு. எனவே தற்போதைய காவலர்களை நம்பிப் பயனில்லை.

ஆகவே சமூகம் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவேண்டும். இல்லையேல் வெள்ளம் தலைக்குமேல் ஏறிவிடும்.

சமூக அமைப்புகள், பொது ஸ்தாபனங்கள் ஒன்று திரண்டு, அதிக கவனம் எடுத்து செயற்பட வேண்டியவிவகாரம் இது. முன்னெடுப்பவர்கள் யார் என்பதுதான் கேள்வி.

தவறினால், கடந்த காலங்களில் நாம் பேணி வளர்த்த —கட்டிக்காத்த— சமூகவிழுமியங்கள் அழிந்து போய்விடுவது உறுதி.

# யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் 82 டாக்டர்களுக்கு வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் 82 டாக்டர்களுக்குரிய வெற்றிடங்கள் இதுவரையும் நிரப்பப்படாமலிருப்பதாக சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

விசேட வைத்தியநிபுணர், வைத்திய உத்தியோகத்தர், சுகாதார வைத்திய உத்தியோகத்தர், தாய் சேய்நலன் வைத்திய உத்தியோகத்தர், தொற்று நோய் தடுப்பு வைத்திய உத்தியோகத்தர், பல் வைத்தியர், உதவி வைத்தியர் ஆகியோருக்குரிய மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய வெற்றிடங்களே இதுவரை நிரப்பப்படவில்லை.

ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், சுற்றுல் கூற்று வைத்திய சாலைகள், கிராமிய வைத்தியசாலைகள், மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும், மத்திய மருந்தகங்கள், மார்பு நோய் சிகிச்சை நிலையம், பாடசாலை வைத்திய நிலையங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய 54 வைத்தியசாலைகள் யாழ். மாவட்டத்தில் தற்போது இயங்கி வருகின்றன.

இந்த வைத்தியசாலைகளில் டாக்டர்கள் பற்றாக்குறையுடன் உதவி வைத்திய சேவையாளர் வெற்றிடங்கள் பல நிரப்பப்படாமலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்திய உதவியாளர்களின் வெற்றிடங்கள் விவரம் வருமாறு:-

★ மருந்தாளர் பிரதேசம் — 01,
★ மருந்தாளர் — 04,
★ பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் — 01,
★ பொதுச் சுகாதார பரிசோதகர் — 87,
★ மேற்பார்வை சுகாதார உத்தியோகத்தர் — 14,
★ பிரதேச மேற்பார்வை சுகாதார தாதி — 01
★ பொதுச் சுகாதார தாதிச்சகோதரி — 15
★ பொது சுகாதார போதனாசிரியர் — 01
★ தாதி உத்தியோகத்தர் — 190
★ பாடசாலை பற் சிகிச்சையாளர் — 03
★ மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவமாது — 16
★ மருத்துவ மாது — 245
★ இயன் மருத்துவ உத்தியோகத்தர் — 02
★ தொழில் வழி சிகிச்சையாளர் — 01
★ நுண் கதிர் கருவியாளர் — 04
★ இருதய துடிப்பு இயந்திரப் பதிவாளர் — 03
★ பல் தொழில் நுட்பவியலாளர் — 01
★ வைத்திய ஆய்வு கூட உத்தியோகத்தர் — 12
★ பிரதேச மலேரியா உத்தியோகத்தர் — 01
★ மலேரியா மேற்பார்வையாளர் — 01
★ மருந்துக் கலவையாளர் — 12
★ பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் — 28

இந்த வைத்தியசாலைகளில் சிற்றூழியர்கள் மற்றும் அலுவலகர்கள் வெற்றிடங்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பாகவும், அவை நிரப்பப்பட வேண்டிய அவசியம் குறித்தும் சுகாதார அமைச்சுக்கு சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் க. தா. சிவபாதம் அறிவித்துள்ளார். (இ-5)

## இலைக்கஞ்சி வழங்க ஏற்பாடு

தாவடி தெற்கு செம்பாடுப் பகுதியில் உள்ள 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வாராந்தம் இலைக்கஞ்சி வழங்க யாழ். சத்தியசாயி சமித்தியின் இளைஞர் அமைப்பினர் முன்வந்துள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பயிலுநர் குழு ஒன்று அண்மையில் தாவடி தெற்கு செம்பாடுக் கிராமத்தில் நடத்திய ஆய்வின் போது அங்குள்ள 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளும், கர்ப்பிணிகளும் போசாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

அதனையடுத்து அப்பகுதி மக்களுக்கு சுகநலக் கல்விக் கருத்தரங்கு நடத்தப்பட்டு சுகாதார அறிவுரைகளும் வழங்கப்பட்டன. (ஐ-15)

## வெங்காயத்துக்கு கிராக்கி

வடமராட்சி, ஜூன் 15

வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது.

அண்மைக் காலமாக ஓர் அந்தர், ஆயிரத்து 200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த வெங்காயம் தற்போது 2 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனையாகிறது.

வெங்காயம் கொழும்புக்கு கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்படுவதாலும், உள்ளூரில் விதைக்குப் பயன்படுத்தப்படுவதாலும் இவ் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-173)

## ஆயுள்வேத நிலையத்தில் சிகிச்சை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

நீராவியடியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் இலவச ஆயுள் வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மேற்படி சிகிச்சை நிலையத்தில் பல வகைப்பட்ட நோயாளர்களும் வந்து சிகிச்சை பெற்றுச் செல்வதைக்காண முடிகிறது. உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்காத பண்டைய முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆயுள்வேத மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் நோய்கள் குணமடைவதால் தற்போது மக்கள் மத்தியில் மீண்டும் ஆயுள்வேத சிகிச்சை முறைகளில் நாட்டம் ஏற்பட்டு வருகின்றது. (ஐ-ரீ)

## தொடர்கல்வி பாடநெறிக்கு ஆசிரியரிடமிருந்து விண்ணப்பம்

அச்சுவேலி, ஜூன் 15

ஆசிரியர் தொடர்கல்வி பாடநெறியை பயில்வதற்கு ஆசிரியர்களிடம் இருந்து தேசிய கல்வி நிறுவகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆரம்ப கணிதம், ஆரம்ப விஞ்ஞானம், பூரணசுகாதாரம்(6ஆம், 7ஆம், ஆண்டு.) ஆகிய பாடத்துறைகளில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

விண்ணப்ப முடிவுதிகதி ஜூன் மாதம், 30 ஆம்திகதி ஆகும். விண்ணப்பங்கள் 'பிரதிப் பணிப்பாளர், முறைமைகள் விருத்திப்பிரிவு-I, தேசியகல்வி நிறுவகம், மகரகம' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடங்களை உரிய ஆண்டு வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி 50 வயதுக்கு உட்பட்டவராக இருந்தால் விண்ணப்பிக்கலாம், என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ - 11)

## வலி. வடக்கைச் சேர்ந்த 500 மீனவ குடும்பங்கள் வடமராட்சி முகாம்களில்

பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை போன்ற இடங்களைச் சேர்ந்த 500 கடற்றொழிலாளர் குடும்பங்கள் தற்பொழுது பருத்தித்துறையில் நலன்புரி நிலையங்களிலும், தனியார் வீடுகளிலும் வசித்து வருகின்றன.

வியாபாரி மூலை, சக்கோட்டை, பொலிகண்டி, கரவெட்டி ஆகிய இடங்களிலுள்ள நான்கு நலன்புரி நிலையங்களில் இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கடற்றொழில் குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணக் கொள்வனவிற்கென கெயர் நிறுவனம் 4 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

சுழற்சிமுறை அடிப்படையில் இக்கடனுதவி வழங்கப்படும். (ஐ-5)

## சண்டிலிப்பாயில் 3 ச. ச. நிலையங்களின் திருத்த வேலைக்கு நிதி

சண்டிலிப்பாய், ஜூன் 15

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மூன்று சனசமூக நிலையங்களின் கட்டட வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுடை மகாசனசமூக நிலையம், மாதகல் மேற்கு சனசமூக நிலையம் மாதகல் மத்தி சனசமூகநிலையம் ஆகியவற்றுக்கு திருத்தவேலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளான மாதகல், இளவாலை, பெரியவிளான் ஆகிய பகுதிகளில் அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தின் உதவித்திட்டத்தின் கீழ் 30 பொதுக் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (ஐ-135)

### நாளை

ஆனி - 2
செவ்வாய்க்கிழமை
திதி: ஸப்தமி
பின்னிரவு 03.40 வரை
நட்சத்திரம்: சதயம்
மாலை 06.07 வரை.
சுபநேரம் 10.23 - 11.53
ராகுகாலம்: 02.53 - 04.23
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உலகிலேயே மிகவும்சிறந்த சீர்திருத்தக்காரன் யார்
-பெர்னாட்ஷோ

## தஞ்சம் மறுக்கப்பட்ட யாழ். வாசி நோர்வேயில் தீக்குளிக்க முயற்சி!

கொழும்பு, ஜூன் 15

நோர்வேயில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவிருந்த யாழ்ப்பாணத் தமிழ் இளைஞர் ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

நோர்வேயில் லியர் என்ற அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சபாபதி சிவப்பிரகாசம் (35வயது) என்ற இளைஞரே அந்நாட்டு குடிவரவுத் திணைக்களத்தால், அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதால் பெற்றோலைத் தன் மீது ஊற்றித் தீ வைத்து தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

எனினும் அப்பகுதியில் நின்ற இரு பாதுகாப்பு ஊழியர்கள் இதனைக்கண்டவுடன் முனைப்புடன் செயற்பட்டுத் தீயை அணைத்து மேற்படி இளைஞரை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் 1996 இல் நோர்வேக்கு வந்துள்ளார். இவரின் புகலிட விண்ணப்பங்கள் மூன்று தடவை நிராகரிக்கப்பட்டு இவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது முதலில் நித்திரைக் குளிகைகளை ஒன்றாக விழுங்கி தற்கொலை செய்ய முயன்றார் என்றும்—

அதிலிருந்து காப்பாற்றப்பட்ட பின் மீண்டும் இம்முறை தற்கொலை செய்ய முயன்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு மனநோய் ஏதாவது உண்டா எனப் பரிசோதித்த வைத்தியர்கள் அவ்வாறு எதுவும் இல்லையெனவும் அவர் ஆரோக்கியமாயிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.சேவையில் ஈடுபடவுள்ள

# கப்பலைப் பார்வையிட நிபுணர் கொரியா பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

திருமலை — காங்கேசன் துறை இடையே நிரந்தரக் கப்பல் சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட 'டெமோகிரசி' என்ற கப்பலைப் பார்வையிடுவதற்காக இலங்கைக் கப்பல்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப அதிகாரியொருவர் தென்கொரியா சென்றுள்ளார்.

திருமலையில் இருந்து அகதிகளை காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்வதற்கென தெரிவு செய்யப்பட்ட மேற்படி கப்பல் தற்பொழுது கொரியாத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது. இக் கப்பலைப் பார்வையிட்டு அது பயணம் செய்வதற்கு ஏற்றதா என உறுதிப்படுத்திய பின்னரே உள்ளூர் கம்பனியுடன் அதற்கான ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்படும்.

இம் மாத இறுதிக்குள் நிரந்தர கப்பல் சேவையை ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

1992 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மேற்படி கப்பலில் முந்நூறு பயணிகள் பயணம் செய்ய முடியும். குளிரூட்டி வசதிகளும் உண்டு.

(ஐ—ரீ)

## பயிற்சிக் கருத்தரங்கு

பனம்பழம், வேப்பம்விதை, இலுப்பம் விதை மற்றும் பயன்தரும் விதைகளைச் சேகரித்து பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு அபிவிருத்தி நிறுவனங்களின் உதவியுடன் விரைவில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக இந்து இளைஞர் மன்றங்களுடனும் அபிவிருத்தி நிறுவனங்களுடனும் கூட்டாகத் தொழிற்பட ஆர்வமுடையவர்கள் முன்கூட்டியேயாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறு பேரவையின் தலைவர் வே. கெ. தனபாலன் தெரிவித்துள்ளார்.

# மின் பாவனையாளர்களிடமிருந்து வைப்புப்பணம் அறவீடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மின்சார சபையிடம் இருந்து புதிதாக மின்னிணைப்புபெறுபவர்களிடம் ஆரம்ப வைப்புப் பணத்தை அறவிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை, பிரதேச சபைகள் ஆகியவற்றின் அங்கத்தவர்களாக இருந்து வந்த மின்சாரப்பாவனையாளர்கள் தற்போது மின்சார சபையின் அங்கத்தவர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் மின்சாரசபை மூலமே மின் விநியோகத்தை பெறுகின்றனர் இவ்வாறு சபையிடம் இருந்து மின்னிணைப்புப் பெறுபவர்களிடம் சிறிய வீடொன்றுக்கு 250 ரூபாவும், பெரிய வீடொன்றுக்கு 600 ரூபாவும், வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் மின்சார சபையினால் வைப்புப் பணமாக அறவிடப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வந்த ஆரம்ப காலங்களில் இவ் வைப்புப் பணம் அறவிடப்படவில்லை. தற்போது புதிய இணைப்புப் பெறுபவர்களிடம் இருந்து இந்தப் பணம் அறவிடப்பட்டு வருகின்றது. விரைவில் முன்பு இணைப்புப் பெற்றவர்களிடம் இருந்தும் இப்பணம் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார சபையின் கணக்குப் பிரிவு வேலைகள் அனைத்தும் கணனிமயமாக்கப்பட்டு வருவதனை அடுத்து இந்த வைப்புப் பணத்தை பாவனையாளர்கள் அனைவரிடமிருந்தும் மிக விரைவில் அறவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மின் பாவனையாளர்கள் தமக்கு மின் இணைப்புத் தேவையற்றது என மின்சார சபையிடம் தெரிவிக்கும் போது இந்த வைப்புப்பணம் மீளளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ—6)

# பனை அபிவிருத்திச் சபை தலைமையகத்துக்கு காணி

யாழ்ப்பாணம். ஜூன் 15

பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் நிர்மாணிப்பதற்குக் காணி கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை முழுவதிலும் உள்ள பனை அபிவிருத்திச் சபைக் கிளைகள் அனைத்துக்குமான தலைமை அலுவலகம் யாழ்ப்பாணத்திலேயே இயங்கி வருகின்றது.

போதிய கட்டட, தளபாட வசதிகள் எதுவுமின்றி சிரமத்தின் மத்தியிலேயே அது இயங்கி வருகின்றது.

சபையின் தலைமை அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் புதிதாக நிர்மாணிக்க வேண்டிய நிதி வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்துத் தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாகக் காணி ஒன்றை வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காணி வாங்கியவுடன் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ—9)

## இவ்வாரம் 3 கப்பல்கள் வரும்

மூன்று கப்பல்கள் யாழ்ப்பாணத்திற்கான உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இவ்வாரம் காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களுக்கு வரவுள்ளன.

# குடியிருப்பின் நடுவே எழும் துர்நாற்றம்!

சுற்றுச் சூழல் தூய்மை பற்றி அரசாங்கம், மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களும் பேசுகிறார்கள். ஆனால் அதனை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

நவாலியில் ஒரு குறிப்பிட்ட பகுதியில், குடிமக்கள், செறிந்து வாழும் பிரதேசத்தில் கடல் அட்டை, சங்கு என்பவற்றைப் பதப்படுத்துகிறார்கள். நாட்கணக்கில் அழுகிப் பழுதடைய விடும் இவற்றால் எழும் நாற்றம் இச் சுற்றுச் சூழலில் வாழும் மக்களின் சுவாசிக்கும் சுதந்திரத்தைப் கூடப்பறித்து விடுகின்றது. இதனால் சுவாச நோய்களுக்கும் ஆளாக வேண்டி ஏற்படுகின்றது. ஓரிருநாள்கள் என்றில்லாமல் இச் சூழலில் வாழும் மக்களுக்கு இந்த அவஸ்தை நீண்டகாலமாகத் தொடர்கிறது.

இச் சங்கடமான நிலை பற்றி உள்ளூர் சுகாதார வைத்தியப் பொறுப்பாளர், பிரதேச அதிகாரி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. தொடரும் இந்த அவஸ்தையைத் தடுக்க உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படுமா? சகிக்க முடியாத பிணவாடையால் இப்பகுதி மக்கள் இடம்பெயர்வதா? அல்லது நோயாளிகள் ஆவதா? உரியவர்கள் எமது நிலைபற்றி அறிந்து துன்பத்தைத் துடைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

-இ.சுப்பையாபிள்ளை

மானிப்பாய்.

# பஸ்ஸுக்காக காத்துநிற்கும் மக்கள் சிரமம் தீராதா?

யாழ்ப்பாணத்திலிருந்து அராலி ஊடாக மாதகல் வரை செல்லும் 789 இலக்கமுடைய பஸ் கடந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து வீதிச் சீர்கேடு காரணமாக தனது சேவையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் நிறுத்திவிடுகின்றது. இதன் காரணமாக மாதகல், சில்லாலை, வடலியடைப்பு, சாந்தை, பனிப்புலம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து வசதியின்றி மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

இதேவேளை 788 ஆம் இலக்க பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து இளவாலைக்குச் செல்கின்றது. செல்லும் வழியில் பண்டத்தரிப்புச் சந்தி வரை சென்று திரும்புகின்றது. கடந்த 30-05-98 அன்று பெரியவிளான் இளவாலைப் பகுதிகள் இராணுவச் சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டிருத்தமையால் இளவாலையில் இரவு தங்கி நின்று காலையில் பண்டத்தரிப்புச் சந்திக்கு வரும் பஸ் அன்று வரவில்லை. இதனால் சில்லாலை, சாந்தை, பனிப்புலம், வடலியடைப்பு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 2 மைல் தூரம் நடந்து வந்து அங்கும் பஸ்ஸை தவறவிட்ட நிலையில் காலை 7.15 இலிருந்து 10 மணி வரை பஸ்ஸுற்காக காத்திருக்க வேண்டிய நிலை உருவானது. அத்துடன் வந்த தனியார் பஸ்களும் நிறைந்த பிரயாணிகளுடன் வந்ததால் அவற்றிலும் போக்குவரத்துச் செய்ய முடியவில்லை.

மேற்படி கிராமங்களிலிருந்து அலுவலகங்களுக்கும், வேறு அவசர தேவைகளுக்கும் புறப்பட்ட மக்கள் காலை 11 மணிக்கே யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தைச் சென்றடைந்தனர்.

மாவடிச் சந்தியிலிருந்து மாதகல் வரையான வீதி சீர் செய்யப்படாது குண்டும் குழியுமாகக் காட்சி தருகின்றது. வீதி திருத்தப்படாது இருக்கும் வரை தொடர்ந்து பஸ் சேவையும் இடை நிறுத்தப்படுமானால் இக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் போக்கு வரத்துக் கஷ்டங்களை தொடர்ந்து அனுபவிக்க நேரிடும். சம்பந்தப்பட்டவர்கள் இக் கிராம மக்களின் சிரமங்களைப் போக்க முன் வருவார்களா?

ஆர். பத்மலோஜினி

பண்டத்தரிப்பு.

# நகைகள், அணிகலன்கள் என்றும் எமது பண்பாட்டுடன் இணைந்தவை

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

திருநெல்வேலி, ஜூன் 15

"யாழ். குடாநாட்டின் பண்பாட்டு வரலாற்றில் பெண்கள் பாரம்பரியமாக அணிந்து வரும் நகைகள் மற்றும் அணிகலன்கள் அழகுக் கலையுடன் இணைந்த தனித்துவமிக்கவையாக விளங்கி வருகின்றன. எமது அணிகலன்களின் மரபுகளையும், நம்பிக்கைகளையும் ஆவணப்படுத்தும் விதத்தில் இந்த ஆய்வு நூல் வெளியிடப்பட்டிருப்பது காலத்தின் தேவையான நல்லதொரு முயற்சியாகும்."

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 'நங்கையரின் அணிகலன்கள் – யாழ்ப்பாண பாரம்பரியம் பற்றிய நுண்கலை ஆய்வு' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் செ. கிருஷ்ணராசா, நுண்கலைத்துறை வருகை விரிவுரையாளர் செல்வி சி. ஜெயானந்தி ஆகியோரினால் எழுதப்பட்ட இந்த நூல் வெளியீட்டுவிழாவுக்கு வரலாற்றுக் கழகத் தலைவர் செல்வி அ. முத்தமிழ்ராஜினி தலைமை வகித்தார். செல்வன் ம. சத்தியகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

நகைகளும், அணிகலன்களும் அழகுக்காக மட்டுமன்றி மருத்துவ தேவைகளுக்காகவும், அணியப்பட்டு வருகின்றன. நோய் தீர்க்கும் தன்மையினால் 'பொன்னுக்கு வீங்கி' என்ற நோய்க்கு தங்கச் சங்கிலி அணிந்து கொள்ளும் வழக்கம் எம்மவரிடையே இன்றும் இருந்து வருகின்றது. எமது தமிழ் இலக்கிய வரலாற்றில் ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களிலும், அணிகலன்களின் பெயர்கள் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது — என்றார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வாழ்த்துரை வழங்குகையில் —

தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட எமது சமூகத்தில் நகைகளுக்கும், அணிகலன்களுக்கும் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது. எமது பிரதேசத்தில் நகைத்தொழிலுக்கும், அச்சுக்கலை தொழிலுக்கும் ஏனைய தொழில் துறைகளுக்கும் இல்லாத கிராக்கி இருந்து வருகின்றது. இடப்பெயர்வுக்குப் பின்பும் இங்கு அதிகளவில் மேற்கொள்ளப்பட்ட தொழில்களில் நகைத்தொழில்முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கிழக்கு மாகாணத்திலும் நகைத்தொழில் அதிக இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால வெள்ளத்தில் மறைந்துபோன அணிகலன்கள் பற்றிய தகவல்களை வரலாற்று ரீதியில் ஆய்வு செய்து படங்களுடன் வெளியிடப்பட்டிருக்கும் இந்நூலானது பழமைக்கும் புதுமைக்குமிடையில் காணப்படும் நுண்கலையம்சங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் இந்த ஆய்வு நூலை வெளியிட்டு எமது பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்த இதன் ஆசிரியர்களைப் பாராட்டுகின்றேன் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் பா. கோபாலகிருஷ்ணஐயர் ஆய்வுரை நிகழ்த்துகையில்—

எமது பாரம்பரிய ஆபரணங்கள் பல போர்த்துக்கீசரின் வருகையின் பின்பு மறைந்து விட்டன. ஆலயங்களில் கலை அம்சமுள்ள விக்கிரகங்கள் கூட அப்போதிருந்த சூழ்நிலைகளினால் காணாமற் போய்விட்டன. சில இடங்களில் இவை கிணற்றினுள் போடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டன.

நாட்டின் அசாதாரணநிலையினாலும் யுத்த சூழ்நிலையினாலும் எமது பண்டைய பண்பாடுகள், கலை கலாசாரங்கள் அழிந்து போகாமல் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இந்த வகையில் நங்கையரின் அணிகலன்கள் பற்றிய இந்த ஆய்வு நூல் வெளிவந்திருப்பது எமது யாழ்ப்பாணப் பாரம்பரியத்தை மக்கள் மத்தியில் ஆவணப்படுத்த பேருதவியாக இருக்கும் என்று நம்புகின்றேன். ஆய கலைகள் அறுபத்திநான்கினிலும் அழகுக் கலையும் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. தற்கால நாகரிகத்திற்கேற்ப நகைளின் தோற்றங்களும், அமைப்புக்களும் மாறி வருகின்ற போதிலும் அடிப்படை அம்சங்கள் பேணப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. நெற்றியில் பொட்டு வைப்பது இன்றும் நல்ல முறையில் பேணப்பட்டு வருகின்றது. பொட்டு இல்லாத நெற்றியை எவரும் விரும்புவதில்லை—அதற்குதனித்துவமான கவர்ச்சியுள்ளது. தெய்வங்களுக்கு — விக்கிரகங்களுக்கு பொட்டு வைப்பதும் நகைகள் அணிவதும் எமது கலாசாரமாக இருந்து வருகின்றது—என்றார்.

யாழ். பல்கலைக்கழக வரவு விரிவுரையாளரும், ஜப்பான் கக்குசுயின் பல்கலைக்கழக ஆய்வாளருமான கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நூல் அறிமுக உரையை நிகழ்த்தினார்.

நூலாசிரியரும், வரலாற்றுத்துறைமுதுநிலை விரிவுரையாளருமான செ. கிருஷ்ணராசா பதிலுரை நிகழ்த்தினார்.

(ஐ—135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் விபத்து

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு — குருநாகல் வீதியில் நேற்று நண்பகல் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 46 பயணிகள் காயமடைந்தனர். (இ-21)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஜூன், 15

யாழ்.வண்ணார் பண்ணை கில்னர் ஒழுங்கை அருள்மிகு ஸ்ரீ மகாமாரியம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவ சப்பறத்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். நாளை மறுதினம் குதிரை வாகனத்தில் சுவாமி உலாவரும்வேட்டைத் திருவிழாவும், எதிர்வரும் 18 ஆம்திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெற்று மறுநாள் காலைதீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெற்று மாலை பூந்தண்டிகையில் சுவாமி உலா வரும் பூங்காவனத்திருவிழாவும் இடம் பெறும். (ஐ-ரீ)

★ ★ ★

நெடுந்தீவு, ஜூன் 15

நெடுந்தீவு புனித யுவானியார் கோயில் திருநாள் திருப்பலி விழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

24 ஆம் திகதி புதன்கிழமை விழா, திருச் சுற்றுப்பிரகாரத்துடன் நிறைவடையும்.

நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு மொன் பேட் அடிகள் திருப்பலிப் பூசைகளை ஒப்புக் கொடுப்பார். (இ-111)

★ ★ ★

ஊர்காவற்றுறை, ஜூன் 15

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயப்பெருவிழா கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்ற கூட்டுத் திருப்பலியுடன் நிறைவெய்தியது.

ஊர்காவற்றுறைப் பங்குத் தந்தை அருட்திரு யேசுதாசன் அன்ரனிபாலா திருப்பலியை நடத்தினார். (இ)

### ஆசிரியர்கள் பற்றி உலக வங்கி தகவல்:

# தமிழ் பாடசாலைகளில் பற்றாக்குறை!

# சிங்களப் பாடசாலைகளில் அதிகம்!!

யாழ்ப்பாணம், ஜூன் 15

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் மிக மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் அதேவேளையில் சிங்கள மொழிப் பாடசாலைகளில் அளவுக்கு அதிகமான ஆசிரியர்கள் உள்ளதாக உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன என்றும்—

சிங்கள மொழிப் பாடசாலைகளில் 14 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர் என்றும்—

கல்வி அமைச்சின் புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி உலக வங்கி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அதாவது ஒரு லட்சத்து 33 ஆயிரம் ஆசிரியர்களைக் கொண்டிருக்க வேண்டிய சிங்கள மொழிப் பாடசாலைகளில் ஒரு லட்சத்து 47 ஆயிரம் ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் மொத்தமாக 39 ஆயிரம் ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டும். ஆனால் 29 ஆயிரம் ஆசிரியர்களே உள்ளனர்.

மாகாண ரீதியில் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் தென் மாகாணத்தில் நாலாயிரத்து எண்ணூறு ஆசிரியர்களும்—

வட மேல் மாகாணத்தில் மூவாயிரம் ஆசிரியர்களும்—

மத்திய மாகாணத்தில் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆசிரியர்களும்—

ஊவா மாகாணத்தில் இரண்டாயிரத்து நூறு ஆசிரியர்களும் மேலதிகமாக உள்ளனர்.

தமிழ் மொழி மூலம் பாடசாலைகளில்

மத்திய மாகாணத்தில் ஆயிரத்து 700 ஆசிரியர்களுக்கும்—

வட மாகாணத்தில் 4 ஆயிரத்து முந்நூறு ஆசிரியர்களுக்கும்—

ஊவா மாகாணத்தில் அறுநூறு ஆசிரியர்களுக்கும்—

வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன. (ஐ-ரீ)

## ஊறணி அந்தோனியார் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 15

காங்கேசன்துறை ஊறணி அந்தோனியார் ஆலயத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

90 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த ஆலயத்தில் எந்த வித பூசைகளும் இடம்பெறவில்லை. அத்தோடு அப்பகுதிக்கு இன்னமும் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவும் இல்லை.

இம்முறை படையினரின் அனுமதி பெற்று பூசை வழிபாடுகள் இடம் பெற்றன.

ஆலயத்துக்குச் செல்வதற்குப் படையினரால் இரண்டு நாள்களுக்கு விசேட பாஸ் வழங்கப்பட்டது. (இ-139-15)

## ஆலய நிகழ்வுகளை வெளியிட ஏற்பாடு

கொழும்புத்துறை, ஜூன் 15

இலங்கை இந்து இளைஞர் பேரவை மாவட்டங்கள் தோறும் நடைபெறும் கோயில் திருவிழாக்கள், நூல் வெளியீடுகள், நற்சிந்தனை பற்றிய சிறப்புச்செய்திகளை ''இந்து இளைஞன்'' செய்தி இதழிலும், மாவட்ட இந்து இளைஞர் பேரவை வெளியீடுகளிலும் வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

எனவே கோயில்கள் சமய நிறுவனங்கள் யாவும் தமது வெளியீடுகளை இலங்கை 'இந்து இளைஞர் பேரவை, 244, தலைமைச் செயலகம், பிரதான வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கும், மாவட்ட இந்து இளைஞர் பேரவைகளுக்கும் அனுப்பி உதவுமாறு இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் செ. சிவபாதசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-30)

### சாந்திக்குமார் கொலை:

# பாதாள உலகக் கோஷ்டியினரின் உதவியை நாடும் பொலீஸார்!

கொழும்பு, ஜூன் 15

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ச. சாந்திக்குமாரின் கொலை தொடர்பாக விசாரணைகள் நடத்திவரும் இரகசியப் பொலீஸார் பாதாள உலகக் கோஷ்டியினரின் உதவியை நாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த எட்டாம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் காயமடைந்து பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்த சாந்திக்குமாரின் கொலைக்கு பாதாள உலகக் கோஷ்டியினர் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்தே இரகசியப் பொலீஸார் சில பாதாள உலகக் கோஷ்டியினரிடம் உதவி கோரி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரகசியப் பொலீஸார் அண்மையில் கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் உள்ள பாதாள உலகக் கோஷ்டியினரைச் சந்தித்து கொலைக்கு காரணமானவர்கள் எனச் சந்தேகிப்பவர்கள் தொடர்பாக விசாரித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-9-10)

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 15

திருத்த வேலைகள் நடைபெற்ற காரணத்தால் கடந்த இரு வாரங்களாக ரத்துச் செய்யப்பட்டிருந்த செஞ்சிலுவை சர்வதேச நோயாளர் பயணச் சேவை மீண்டும் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்புக்கு மேலதிக சிகிச்சைபெற செல்லவிருக்கும் நோயாளர்கள் 18 ஆம் திகதி காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமுகம் கொடுக்கும்படி கோரப்பட்டுள்ளது. (இ-15)

### வீரமாகாளி அம்மன் ஆலயம்:

# யாழ். ஆரம்ப நீதிமன்ற உத்தரவு இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜூன் 15

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய நிர்வாகத்தை தற்காலிக நிர்வாக சபைஒன்றிடம் கையளிக்கும்விதத்தில் யாழ். ஆரம்ப நீதிமன்றம் கடந்த 29-05-98 இல் விடுத்த உத்தரவை மேல் நீதிமன்றம் இடைநிறுத்தி வைத்துள்ளது.

மேற்படி ஆலய நிர்வாகத்தை தற்காலிக நிர்வாக சபை ஒன்றிடம் கையளித்து யாழ். ஆரம்ப நீதிமன்றம் விடுத்த உத்தரவை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுச் செய்யப்பட்டதை அடுத்தே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த இடைக்கால உத்தரவை விடுத்துள்ளது.

இந்த மேன்முறையீடு தொடர்பாக எதிர் மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், யாழ். ஆரம்ப நீதிமன்றத்தின் உத்தரவை 25-06-98 ஆம் திகதி வரை இடை நிறுத்தி வைக்குமாறும் உத்தரவிட்டிருக்கிறது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஹெக்டர் யாப்பா, யூ. டீ. இசற். குணவர்த்தன ஆகியோர் இந்த உத்தரவை விடுத்துள்ளனர். (ஐ)

# கூட்டுறவுச் சங்க அனுகூலங்களை மக்கள் சரிவர பயன்படுத்துவதில்லை

## ப.நோ.கூ.ச. தலைவர் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 15

பொதுமக்கள் கூட்டுறவுச் சங்கங்களின் அனுகூலங்களை சரிவரபயன்படுத்திக்கொள்வதில்லை, மாறாக தனியாரிடம்கூடிய விலைக்கு பொருள்களை வாங்கி நட்டமடைகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரொருவர் இவ்வாறு வருத்தம் தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக மக்களால் நடத்தப்படுவதே கூட்டுறவு. மக்களின் நன்மை கருதி பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிளைகளில் நிர்ணய விலையிலேயே சவர்க்காரம், பால்மா பலசரக்கு மற்றும் பொருள்களை வழங்க ஏற்பாடுகள் செய்துள்ள போதும் மக்கள் மேற்படி பொருள்களை சங்கக்கிளைகளில் கொள்வனவு செய்வதில்லை. இதனால் அப்பொருள்களை நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே சட்டவிரோதமாக தனியார்கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றனர். அதன் பின்பு அவர்களிடமிருந்து கூடியவிலை கொடுத்து மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்கிறார்கள். எனவே மக்கள் கூட்டுறவுச் சேவையை சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதேவேளை —

குடாநாட்டில் பலபாகங்களிலுமுள்ள கூட்டுறவு சங்கக்கிளைகளில் பொருள்கள் தரக்குறைவாகவும் விலை உயர்வாகவும் விற்கப்படுவதாகவும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எந்தப் பகுதியிலாயினும் கூட்டுறவுக் கிளைகளில் தரமற்ற, நிறைகுறைவான பொருள்கள் அல்லது பொருள்கள் விலைஉயர்வாக விற்கப்பட்டால், அல்லது தனியார் துறையினருக்கு பொருள்கள் சட்டவிரோதமாக விற்கப்பட்டால் மக்கள் உடனடியாக அப்பகுதி கூட்டுறவு பரிசோதகரிடமோ, கூட்டுறவுச் சங்கத் தலைவர்களிடமோ அதுபற்றிமுறைப்பாடு செய்யலாமெனவும்—

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் எமக்குத் தகவல்களைத்தந்து தங்கள் உரிமைகளைப்பாதுகாத்துக் கொள்ளுவதோடு கூட்டுறவில் நாட்டுயர்வு பெற வழி செய்ய வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ஐ-ரீ)

# 100க்கு மேற்பட்ட ஆடுகள் கோழிகள் பலியிடப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 15

கவுணாவத்தை வயிரவர் ஆலயத்தில் இடம்பெற்ற வேள்வியில் நேற்று முன்தினம் சுமார் 100-க்கு மேற்பட்ட கடாக்களும் சுமார் 150-க்கு மேற்பட்ட கோழிகளும் பலியிடப்பட்டன.

இப்பலியிடல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் கடாக்களுடனும் கோழிகளுடனும் ஆலயத்துக்கு வந்தனர்.

மாட்டு வண்டில்கள், லான்ட் மாஸ்ரர்கள் ஆகியவற்றில் பெருமளவு கடாக்கள் ஏற்றி வரப்பட்டன.

எனினும் காலை 9 மணிக்கு பின்னர் கடாக்களையும் கோழிகளையும் கோயில் முன்றலுக்குக் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டது.

இதனால் பெருமளவு கடாக்கள் பலியிடப்படாமலேயே திரும்பிச் சென்றன.

பலியிடப்பட்ட கடாக்கள் இம்முறை அதிக விலைக்கு விற்பனையானதையும் அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. (இ-6)

# மெய்வல்மை போட்டியில் யாழ். அணி சாதனை

திருகோணமலை, ஜூன் 15

திருகோணமலையில் தற்சமயம் நடைபெறும் மாவட்டங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் யாழ். மாவட்ட அணியினர் இரு சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

யாழ். அணியைச்சேர்ந்த ரமணன் நீளம் பாய்தல் போட்டியில் 7.06 மீற்றர் பாய்ந்து சாதனை நிலைநாட்டினார்.

110 மீற்றர் தடை தாண்டி ஓட்டப்போட்டியில் திருமாறன் சாதனை நிலைநாட்டினார்.

யாழ். அணியைச் சேர்ந்த றமணன் தடியூன்றிப் பாய்தல் போட்டியில் 2ஆம் இடத்தையும், முப்பாய்ச்சல் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றார்.

பரிதி வட்டம் வீசும் போட்டியில் உதயகுமார் 2ஆம் இடத்தையும், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜெராட் ஜெயராசா 4ஆவது இடத்தையும் பெற்றனர். (இ-3)

## அம்பாறையில் இளைஞன் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஜூன் 15

அம்பாறை மாவட்டம் வீரமுனையில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சின்னத்துரை அண்ணாமலை (26 வயது) என்பவரே சுடப்பட்டதாக அடையாளம் காணப்பட்டது. (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INSTITUTE OF INFORMATICS STUDIES

IIS

98/ 99 கல்வி ஆண்டிற்கான

2ஆம் பருவகாலத்திற்கு உரிய கணனி கற்கை நெறிகள் ஆரம்பம்.

20 - 06 - 98

மேலதிக விவரங்கள்:

17 - 06 - 98 உதயனில்

– Director

I I S.

(சி/4008)


# ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஜனாதிபதி தயாரா?

## ரணில் சவால் விடுகிறார்

கொழும்பு, ஜூன் 15

ஜனாதிபதித் தேர்தல் உட்பட சகல தேர்தல்களிலும் அரசுக்குத்தான் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்குமானால் மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்க ஜனாதிபதி தயாரா?

மேற்கண்டவாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா சவால் விடுத்தார்.

தங்காலையில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஐ.தே.க கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

ஐ. தே. க. எந்தவொரு தேர்தலையும் சந்திக்கத் தயாராகவுள்ளது.

அரசுமீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனத்துக்குத் தகுந்த பதிலைத் தேர்தல்களில் கொடுக்க மக்கள் தயாராகியுள்ளனர்.

பதவிக்காலம் முடிவடைய முன்பு ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டுமானால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

அதற்குரிய ஆதரவை ஐ.தே.க. வழங்கத்தயார்.

இப்படி அவர் கூறினார்.

(இ-21)

## காயமடையும்..

(முதலாம் பக்கத் தொடர்)

வேண்டும்.

''நாட்டைப் பாதுகாக்க போர் புரிந்து வரும் இவர்கள் குறித்து நாட்டின்தலைமைத்துவம் இதுவரை கவலைதெரிவிக்காதது துரதிர்ஷ்டமானது.

''ஐ. தே. க. என்ற ரீதியில் இவர்களின் நலன்களில் நான் அக்கறை கொள்ளவில்லை. முன்னாள் பிரதமர் என்ற ரீதியில்தான் அக்கறை கொள்கிறேன் —

இப்படி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

(இ-3-21)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி, ஜூன் 15

மிருசுவில் பங்குத் தந்தையாக ஐந்து வருடங்கள் பணி பாற்றி இடமாற்றலாகிச் செல்லும் அருட்திரு பீற்றர் துரைரத்தினம் அடிகளுக்கு கிளாலிப் பகுதி மக்களால் கிளாலி புனித அந்தோனியார் தேவாலய முன்றலில் பிரிவுபசாரவிழா அண்மையில் நடத்தப்பட்டது.

இந்த விழாவில் கிளாலி உப அஞ்சல் அதிபர் அ. ஸ்ரனிஸ்லாஸ், கிராம அலுவலர் ம. யேசுதாசன், கிளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் அ. அல்பிரட் உட்பட பலர் அடிகளாரின் இறைசேவையைப் பாராட்டி உரையாற்றினர்.

(இ-117)


# HARY'S INSTITUTE

KONDAVIL EAST, KONDAVIL.

யாழ். பல்கலைக்கழக 2ஆம் வருட ARTS, COMMERCE, MANAGEMENT மாணவர்களுக்கு அவர்களின் பிரிவுகளுக்கும் பரீட்சைக்கும் ஏற்ற முறையில் விசேட ENGLISH PAPER CLASS

நாளை ஆரம்பம்: 16 - 06 - 1998

செவ்வாய் காலை 6 30

TUESDAY
THURSDAY ] – 6,30 A M. — 7.30 A M.

By. MR M. A. HARI (B A. Dip in Eng )

★ அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.

(56874) — DIRECTOR


## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

பிரான்ஸில் நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று மூன்று ஆட்டங்கள் இடம்பெறவிருக்கின்றன.

இன்று நடைபெறும் ஆட்டங்களும் ஆட்டம் நடைபெறும் நேரங்களும் (இலங்கை நேரப்படி) வருமாறு:-

★ இரவு 8-30 மணி — இங்கிலாந்து எதிர் ரியூனிஷியா.

★ இரவு 9-30 மணி ரூமேனியா எதிர்—கொலம்பியா.

★ இரவு 1-00 மணி—ஜேர்மனி எதிர் அமெரிக்கா.

# நயினை உற்சவகால போக்குவரத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 15

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவ காலங்களில் போக்குவரத்துச் சேவையைச் சிறப்பாக நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வே. சோ. சொக்கலிங்கம் யாழ். அரச அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வருடம் இந்த உற்சவத்துக்குச் சென்று திரும்பிய அடியார்களிடம் பெறப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் தாமதித்து வழங்கப்பட்டதால் ஏற்பட்ட சன நெருக்கடி காரணமாகப் பொறுமையிழந்த பாதுகாப்புப் படையினர் அடிதடியில் ஈடுபட்டனர். இத்தகைய நிலை இவ்வருடமும் ஏற்படாமலிருப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நேர்த்திக்கடன்களை முடித்துத் திரும்பிய அடியார்கள் குறிகாட்டுவானில் தங்குவதற்கான தற்காலிக மண்டப வசதிகள், குடி தண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறும் நயினை அம்பாள் உற்சவத்துக்குச் சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அடியார்கள் யாழ். மாவட்டத்திலிருந்து செல்வார்கள் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

(இ-5)

## லஞ்ச...

(முதலாம் பக்கத்தொடர்)

கோரியுள்ளார் என்றும் —

அவர்கள் பதவி விலக மறுத்து வருவதாகவும் — அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பதவி விலக முடியாமைக்கான காரணங்களை விளக்கி அவர்கள் ஆறு பக்க அறிக்கையை ஜனாதிபதிக்குஅனுப்பியுள்ளனர்.

''மூத்த அரச உறுப்பினர்கள் மீது தாம் மேற்கொண்ட விசாரணை காரணமாகவே பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டோம் என்று மக்கள் மத்தியில் கருத்துநிலவும் அதனாலேயே பதவி விலக மறுத்து வருகின்றோம்'' என்று அந்த அறிக்கையில் அவர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

(இ-3-9)


## வடமராட்சியில்....

புகைப்படப்பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

உங்களது வர்ணப் புகைப்படச்சுருள்கள் யாவும் 24 மணி நேரத்தில் பிரதியாக்கம் செய்து கொடுக்கப்படும்.

நிதுஷா ஸ்ருடியோ

நெல்லியடி.

★ பாடசாலை மாணவர்களுக்கான அஞ்சல் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றிற்கான புகைப்படங்களையும் —

★ கறுப்பு வெள்ளை, வர்ணப்புகைப்படங்களை எந்த அளவுகளிலும் பெரிதாக்கிக் கொள்ளவும் —

★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளை மிகவும் துல்லியமான முறையில் வர்ணப்படம் பிடித்திடவும் —

★ வர்ணப்படச் சுருள்கள், அல்பம், மணமகன் மணப்பெண் அலங்காரப்பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும் —

நீங்கள் நாடவேண்டிய தனித்துவமான ஸ்தாபனம்

'வர்ண சொப்பனங்களின் வசந்த வாசல்'

நிதுஷா ஸ்ருடியோ

பிரதான வீதி, நெல்லியடி.

(53854)


## சுகாதார பரிசோதகர் விடுதலை

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கடந்த இரு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பொதுச் சுகாதார பரிசோதகர் பொ. கிருபாகரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

06-06-96 அன்று இவரது மட்டக்களப்பு வீட்டிலிருந்து எல். எம். ஜி. —1, கிரனேட் —2, எல். எம். ஜி. ரவைகள் —15 என்பன கைப்பற்றப்பட்டதாக இவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என். இராமச்சந்திரன் இவரை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

(இ-21)

## டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பு நகரில் டெங்குத் தடுப்பு பிரசாரம்மேற்கொள்ளப்பட உள்ளது.

இக்காலப் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் கருத்துரைகள் வழங்கப்பட உள்ளன.

மாணவர்களின் துணையுடன் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்பட உள்ளது. (இ-9)

## இரத்ததானம்

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க ஒன்றியம், பரிசுத்த ஆவிதினத்தை முன்னிட்டு கடந்த வாரம், யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்த தானம் செய்தது.

ஒன்றியத்தைச் சேர்ந்த சுமார் 31 பேர் தாமாகவே முன்வந்து இந்த இரத்த தானத்தைச் செய்தனர்.

## மாங்குளம்...

(முதலாம் பக்கத்தொடர்)

தொடர்ந்தும் புலிகளின் நிலைகள் மீது படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இத்தாக்குதல்களில் புலிகளுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது — இப்படி பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

(இ-3-9)

## உயர்வலு...

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கப்பட்டது.

இந்த மின்மாற்றி தகர்க்கப்பட்டதால் கல்வியியற் கல்லூரி, விவசாயத்திணைக்களம், கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையம் ஆகியவற்றுக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதாகவும்—

மின்சாரசபை நேற்று புதிய மின்மாற்றி ஒன்றை அங்கு பொருத்தி நேற்று நண்பகல் மின்விநியோகத்தைச் சீர் செய்ததாகவும்தெரிவிக்கப்பட்டது.

(இ-1-3-9-21-164)


-- வடமராட்சியில் -

(அதி சிறந்த தமிழ் விளக்கத்துடன் மிக இலகுவான முறையில் ஆங்கிலம் கற்பிக்கும் தனித்துவமான நிறுவனம்)

OXFORD ENGLISH ACADEMY

ஆலடிப்பிள்ளையார் வீதி, சுப்பர்மடம், பருத்தித்துறை.

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 19-06-1998

★ O/L, A/L எடுத்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள், வேலைசெய்வோருக்கான உயர்தர ஆங்கிலம்.

By. Mr B. JOTHY [B. Com. (Hons)]

முக்கிய குறிப்பு: வடமராட்சி தவிர்ந்த ஏனைய இடங்களில் இருந்து வருகை தரும் பல்கலைக்கழக மாணவர்கள், வேலைசெய்வோருக்கு என விசேட நேர அட்டவணை வழங்கப்பட்டுள்ளது.

(அனுமதிகளை முன் கூட்டியே அலுவலகத்தில் பெறவும்)

(56855)



எமது புதிய வெளியீடுகள்!

விஜய் - கௌசல்யா நடித்த

ப்ரியமுடன்

சிரஞ்சீவி - சாக்ஷி

மெகா மாஸ்டர்

ஒறிஜினல் வெளியீடுகள்!

ஐ லவ் இந்தியா
வைகாசி பொறந்தாச்சு
புதிய பாதை
ரிக்ஷா மாமா
காதல் கீதம்
மைதிலி என்னைக் காதலி
காத்தவராயன்

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/4021)


## பொலன்னறுவை..

(முதலாம் பக்கத் தொடர்)

தலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் துப்பாக்கி ஒன்றுடன் கைப்பற்றப்பட்டதாகவும்—

அந்தச் சடலத்தைச் சுத்தம் செய்தபோது அச்சடலத்தில் இருந்த கிரனேட் வெடித்ததில் இருபடையினர் காயமடைந்ததாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

பலாலி இராணுவ தலைமையகம் தெரிவித்தது.

அதைத் தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது.

இத்தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயங்களுக்குள்ளானார்.

(இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15 -06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org